நன்மக்களைப் பெறுதல்

4603

சுவாமி சித்பவானந்தர்

இயற்றியது

107

பொருளடக்கம்

தலைப்புகள்		பக்கம்
1.	காரண காரியம்	1
2.	அடிப்படைச் சீர்மை	4
3.	விவாகம்	7
4.	விவாகத்துக்கு ஏற்ற வயது	9
5.	கலப்பு விவாகம்	12
6.	காதல் மணம்	15
7.	கற்பு	20
8.	தபசு	24
9.	துன்பத்தை ஏற்கும் முறை	27
10.	பிள்ளைவரம்	30
11.	கருத் தரித்தல்	34
12.	இரண்டு கேடுகள்	37
13.	ஸ்மிருதிகளின் பிரமாணம்	40
14.	கர்ப்பிணியின் கடமைகள்	46

Dr. S. Venkataraman
In Memory Of
T. Sitaram

நன் மக்களைப் பெறுதல்

காரண காரியம்

இயற்கையில் நிகழ்வன அனைத்தும் காரண காரியமாக வந்தமைகின்றன. காரணத்துக்கேற்ற காரியம்; காரணம் உயர்ந்ததாயிருந்தால் காரியமும் உயர்ந்தது. காரணம் புனிதமானதாயிருந்தால் காரியமும் அத்தகையதே. மற்று, காரணம் முறை வழுவியதாய் விட்டால் அதன் பயனும் புல்லியதாய்விடும். இரண்டொரு உதாரணங்கள் இவ்வுண்மையை நன்கு விளக்குவனவாகும். பூமியில் சாகுபடி செய்து விளைவு எடுக்கிறோம். விளைவு என்னும் காரியம் அதற்கு முதன்மையாயுள்ள காரணத்துக்கு அன்னியமானதன்று. காரணமே காரியமாகப் பரிணமித்து வருகிறது. வளம் நிறைந்த பூமி, பொருந்திய உரம், போதுமான நீர், நல்ல வித்து, அதைப் பருவத்தே பயிர்செய்தல்—ஆகிய இவையாவும் சேர்ந்து காரணம் எனப்படும். வேண்டியவாறு நல்ல விளைவு வாய்ப்பது காரியமாகும். இதற்கு மாறாக பூமி தரிசாயிருந்தால், அதற்கு உரம் காணாது போய்விட்டால், நீர்வளம் இல்லாது போய்விட்டால், வித்தும் வலிவற்றதாய் இருந்தால், அத்தகைய கிருஷியிலிருந்து நல்ல பலனை எதிர்பார்க்க முடியாது. காரணத்துக்கேற்ற காரியம் தானே வந்தமையும்.

நச்சுப்பூச்சிகள் நிறைந்த இடம், கேடுடைய குடிநீர், விஷக்காற்று உண்டாகும் சதுப்பு நிலம், சத்தில்

லாத உணவு — இத்தகைய குறைபாடுகளுக்கு உட்பட்டு வாழ்பவனுடைய வாழ்வே குன்றிப்போய்விடும். அதன் பயனுக நோய்வாய்ப்படுதலும், ஆயுள் அற்பமாய்ப்போவதும், ஆற்றல் சுருங்கி விடுவதும் காரணத்துக்கேற்ற காரியமாம். இனி, அதே வாசஸ்தலத்தில் நச்சுப்பூச்சிகளே நாசமாக்கி, நஞ்சுடைய நீரை நன்னீராகத் திருத்தியமைத்து, சதுப்பு நிலத்தை உலர்ந்த நிலமாக்கி, சுவையும் சத்தும் நிறைந்த உணவுப் பொருளே யுண்டுபண்ணி அதைப் புசித்து வாழ்ந்தால் மேம்பாடு தானே வந்தமையும். நரக வாழ்வைச் சொர்க்க வாழ்வாக மாற்ற மனிதனுக்கு முடியும். இவையாவும் காரணத்துக்கேற்ற காரியம் என்னும் கோட்பாட்டில் அடங்குகின்றன. குருட்டு வாய்ப்பு என்பது இயற்கையில் இல்லே.

உயிருடைய, உயிரற்ற எதை வேண்டுமானுலும் நல்லதாகத் திருத்தியமைக்க மனிதன் கற்றுக்கொண்டிருக்கிருன். கெட்டதை நல்லதாக மாற்றியமைப்பதே முன்னேற்றம் எனப்படுகிறது. திட்டம்போட்டு அதன்படி நல்ல பொருள்களே உண்டுபண்ணலாம். நல்ல நீர், நல்ல நிலம், நல்ல காற்று, நல்ல உணவு, நல்ல உடை, நல்ல வீடு, நல்ல செடி, நல்ல பறவை, நல்ல கால்நடைகள் இவை போன்ற மற்றும் பலவற்றை நினைத்தபடி அமைத்துக்கொள்ளலாம். இனி, இவையனைத்துக்கும் அடிப்படையாயுள்ள சில கேள்விகளே நாம் கேட்கவேண்டும். நன்மக்களே நாம் உண்டுபண்ண முடியுமா? புறத்திலுள்ள அனைத்தையும் நல்லதாக்கத்

தெரிந்துகொண்ட மனிதன் தன்னை நல்லவனுக்கத் தெரிந்து கொள்ளாவிட்டால், இவன் பெற்றுள்ள நலம் யாது? புறப்பொருளைவிட அகப்பொருளாகிய தன்னைத் தக்கான் ஆக்கிக்கொள்ள மனிதன் தெரிந்து கொண்டால், மேலும் ஏதேனும் குறைபாடு அவனைச் சூழ்ந்திருக்க முடியுமோ? திரும்பத் திரும்பக் கேட்டுத் துருவித் துருவி ஆராய வேண்டிய கேள்விகளாம் இவை.

புறவுலகைவிட முற்றிலும் தன் கைவசமுள்ளது அகவுலகம். புறவுலகை மனிதன் திருத்தியமைக்கலாம்; அதைவிடப் பன்மடங்கு உறுதியாக அகவுலகை அவன் திருத்தியமைக்கலாம். உலகில் நன்மக்களின் எண்ணிக்கை குறைந்து போய்விட்டால் அதற்குப் பொறுப்பாளி மனிதனேயாம். திட்டம் போட்டு அத் திட்டத்தின்படி நன்மக்களை மனிதன் உண்டுபண்ண லாம். மேலோர் கூட்டம் உலகில் அதிகரிப்பது வெறும் குருட்டு வாய்ப்பன்று. காரண காரியமாக அமைந் துள்ள உலகிலே நன்மக்கள் வாய்ப்பதற்கும் காரண முண்டு.

தம்பொருள் என்பதம் மக்கள்; அவர் பொருள்
தம்தம் வினையால் வரும்

என்பது பொய்யாமொழி. ஒருவனுக்குரிய பணத்தை யும் பண்டத்தையும் நொடிப்பொழுதில் இன்னொரு வனுக்குச் சொந்தமாக்கி விடலாம். எனவே புறப் பொருளைத் தன்பொருள் என்பது வெறும் பெயரள விலேயாம். மற்று, தன் சொரூபமே மைந்தன் சொரூ

பமாக வடிவெடுக்கிறது. ஆக, அவனே உண்மையில் தன் பொருள். ஆத்மஜன்—தன்னில் தோன்றியவன்—எனப்படுகிருன் மைந்தன். அத்தகையவன் நன் மகனுகவே வாய்க்கலாம், அல்லது புல்லியனுகப் போய்விடலாம். அதெல்லாம் பெற்ருேரின் வினையின் பயனேயாம். காரணத்துக்கேற்ற காரியம். செல்வத்துள் செல்வம் மக்கட் செல்வம். மேலைத் தவத்தளவேயாகுமாம் அங்ஙனம் தான் பெற்ற மக்கட்செல்வம். இங்குத் தவம் என்பது நல்வினையால் தன்னைப் பக்குவப்படுத்திக்கொள்ளுதல் என்று பொருள்படுகிறது. நன்மக்களைப் பெறுதற்கு முதலில் தான் நல்லான் ஆக வேண்டும். நல்ல விளைவுக்குப் பூமியைப் பண்படுத்துவது முதற் கடமையாகும். நன்மக்களை ஈன்றெடுக்கத் தாய் தந்தையர் தங்களைத் தகுதியுடையவர்கள் ஆக்குதல் முதல் கடமையாகும். தகைமையானது ஒரே தலைமுறையில் வாய்த்து விடாது. தலைமுறை தலைமுறையாக அதற்கு ஆயத்தப்படுத்துதல் வேண்டும். ஏனென்ருல் உயிரின் உயர்வுக்கு ஏற்பப் பண்பாடும் பலவகைப்பட்டதாகிறது. பெரு முயற்சியின்றி நல்லதைப் பெற்றுவிட முடியாது.

அடிப்படைச் சீர்மை

நன்ருக முதிர்ச்சியடையாத இளஞ்செடியொன்று பூவும், பிஞ்சும் விடுவது பொருந்தாது. அது விடுகிற அரும்பைத் தோட்டக்காரன் கிள்ளி யெறிந்து விடுவான். பலன் தருவதில் இரண்டொரு வருஷம்

செடி தடைப்படுமளவு அது வலிவு பெறுகிறது. பின்பு பலனும் நலம் நிறைந்ததாகும். இக்கோட்பாடு ஸ்தாவர ஜங்கமங்களாகிய எல்லா உயிர்களுக்கும் பொதுவானது. மானுடவுலகில் இது 'காப்பது விரதம்' என்னும் கொள்கையாக வடிவெடுக்கிறது. வாழ்க்கையில் நான்கு படித்தரங்கள் உண்டு. அந்நான்கும் நான்கு ஆச்ரமங்கள் எனப்படுகின்றன. பிரம்மசரிய ஆச்ரமம், கிரஹஸ்த ஆச்ரமம், வானப்பிரஸ்த ஆச்ரமம், சந்நியாச ஆச்ரமம் என்பன அந்நான்கும். இவைகளுள் முதல் ஆச்ரமமாகிய பிரம்மசரிய ஆச்ரமம் வீட்டுக்கு அஸ்திவாரம் போன்றது. கண்ணுக்குத் தென்படாதிருந்தாலும், அஸ்திவாரம் உறுதிபெறுமளவு வீடு வலிவு பெறுகிறது. அது நெடிது நிலைத்திருக்கவும் முடியும். அங்ஙனம் மானுட வாழ்வு என்னும் மாளிகைக்கு அடிப்படைச் சீர்மை தருவது பிரம்மசரிய விரதம். ஐந்து வயதில் அது துவங்குகிறது. ஆனால் எந்த வயதில் அது முடிந்துவிடவேண்டும் என்று எல்லை கட்டமுடியாது. அவ்விரதத்தைக் காக்குமளவு வாழ்வை அது உறுதிப்படுத்துகிறது.

சிறுவர் சிறுமிகள் ஆகிய இருபாலார்க்கும் அது பொதுவானது. ஆண் பெண் என்ற பால் வாசனையறியாது அவர்கள் வாழவேண்டும். பால் வாசனையறியாத சிறுவர்களுக்குக் காம உணர்ச்சி இளமையில் உண்டாவதில்லை. காம உணர்ச்சி வாராது ஒதுக்கப்படுமளவு உடல் உறுதி பெறுகிறது; உள்ளம் தெளிவடைகிறது; வாழ்வு புனிதமடைகிறது.

கட்டுப்பாடான வாழ்வு இளமையில் அமைய வேண்டும். ஆசைக்கு வசப்பட்டுப் பொறிகள் புலன்களிலே போகலாகாது. நாவின் சுவைக்காகவென்று உணவை உண்பது கட்டுக்கு அடங்காத பொறியின் போக்கு ஆகும். சத்துடைய உணவை ஈசுவரப் பிரசாதமாக உண்பது புலனடக்கமாம். உடலுக்கு நலம் தருகிற உணவு கசப்புடையதாயிருந்தாலும், உப்பு இல்லாத சப்பை உணவாயிருந்தாலும் மனம் கோணாது அதை உண்பவன் சுவையை வென்றவனாகிறான். அத்தர், ஜவ்வாது முதலிய வாசனைத்திரவியங்களில் பற்று வைக்காதிருப்பவன், தூய காற்றையே சுவாசித்து வருபவன் கந்தம் அல்லது நாற்றம் என்னும் புலனை வென்றவனாகிறான். தென்படுகிற வடிவங்களெல்லாம் தெய்வ சொரூபம் எனக் காண்பவன் ஒளி அல்லது ரூபம் என்னும் புலனை வென்றவனாகிறான். புன்மொழிகளைக் காதில் போட்டுக்கொள்ளாதவன் ஓசை அல்லது சப்தம் என்னும் இந்திரியார்த்தத்தை ஜயித்தவன் ஆகிறான். இங்ஙனம் ஐம்புலன்களை அடக்கி வாழுபவன் அமரன் ஆகின்றான். மேன்மையனைத்தும் அவனுக்குச் சொந்தம் என்பது வெளியாகும்.

இனி, முதியோர்க்குப் பணிவிடை செய்தல், முதியோர்க்கு அடங்கி நடத்தல் ஆகிய பண்புகள் வேண்டும். தாய், தந்தை, குரு ஆகியவர்களுக்கு அடங்கி நடக்குமளவு மாணாக்கன் ஒருவனுக்கு மேன்மையுண்டாகிறது. அவர்களுக்கு அன்புடன் பணிவிடை செய்யுமளவு தான் புனிதன் ஆகிறான். இத்தகைய

அடிப்படை வாழ்வினின்று சீர்மையனைத்தும் உண்டா கின்றன.

விவாகம்

நல்ல விளைவு எடுப்பதற்கு நல்ல நிலமும் வேண் டும்; நல்ல வித்தும் வேண்டும். அதற்குமேல் வித்துக் கேற்ற பூமி என்னும் கோட்பாடும் உண்டு. கிருஷியில் அனுபவம் உள்ளவர்க்கே அக்கோட்பாடு விளங்கும். நல்லதும் கிடைப்பதற்கு அறியதும் ஆன விதையைக் கொண்டுபோய் ஏதேனும் ஒரு நிலத்தில் விதைத்துவிட லாகாது. அது செழிப்புற்று வளர்தற்குப் பொருந்திய பூமியும் தகுந்த சீதோஷ்ணமும் வேண்டும். நல்ல மக்களை ஈன்றெடுக்க விரும்புபவர் மணந்து கொள்ளு தலிலும் அத்தகைய கோட்பாடு உண்டு.

விவாகம் என்பது வாழ்க்கைக்குரிய வெறும் ஒப் பந்தம் அன்று. அது புனிதமானதொரு இணக்கமாகும். சமுதாயத்துக்குரிய ஒரு வாழ்க்கைக் கோட்பாடாக அது அமைந்திருக்கிறது எனினும் பாரமார்த்திக தத்து வத்தையே அது அடிப்படையாகக் கொண்டுள்ளது. அறநெறியை முறைவழுவாது கையாளுதற்கு ஆணும் பெண்ணும் ஒருவர்க்கொருவர் துணையாயிருத்தல் வேண்டும். உயிரும் உடலும் இணைபிரியாதிருப்பது போன்று அவர்கள் பரஸ்பரம் சம்பந்தப்பட்டவர்கள். சிவமும் சக்தியும் வெவ்வேறு வஸ்துக்களன்று. பிர கிருதியின் வாயிலாகப் புருஷன் தன்னை விளக்கிக்கொள் கிறது. பெயரளவில் புருஷன் வேறு, பிரகிருதி வேறு.

சிவமும் சக்தியும் ஒன்றே என்பதை அர்த்தநாரீசுவர வடிவம் விளக்குகிறது. அக்கோட்பாட்டை ஒத்து மணமகனும் மணமகளும் ஒன்றுபட்டுவிடுகின்றனர். உடல் இரண்டு, தன்மை ஒன்று என்பதே விவாகத்தின் கருத்து ஆகும்.

வயதிலே பெண்ணைவிட ஆண் சற்று மூத்தவனாக இருத்தல் வேண்டும். உடலில் முதுமையடைதலில் பெண்ணைவிட ஆண் அதிக காலம் எடுத்துக்கொள்கிறான். உடல் முதிர்ந்த பிறகும் அது திண்மைபெறுதற்குக் காலம்தேவை. வயதில் ஆண் மூத்தவனாயிருக்க வேண்டும் என்பதன் கோட்பாடு அதுவேயாம்.

பண்பாட்டிலும் ஆசாரத்திலும் தம்பதிகளுக்கிடையில் முரண்பாடு இருக்கலாகாது. ஒருவரிடம் ஒழுக்கமும் சீலமும் ஓங்கியிருக்கிறது; மற்றவரிடம் அது மங்கியிருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அருவருப்பும் அலட்சியமும் அதினின்று உண்டாகும் அதனால் இல்வாழ்வு பயனற்றதாய்விடும்.

கல்வியில் ஆடவன் மேம்பட்டவனாயிருக்கலாம். ஆடவனைவிடப் பெண்பாலானவள் மேம்பட்டவளாயிருக்கலாகாது. கணவன் அறிந்திருப்பதைவிடத் தான் அதிகம் அறிந்திருப்பதாக மனைவி உணர்வாளானால், தன்னைத்தூக்கி மதித்தல் என்னும் இழுக்கு அவளுக்கு வந்துவிடும். அதேபாங்கில் தன்னைக் கீழ்மைப்படுத்தியுணர்தல் என்ற இழுக்கு கணவனுக்கு வந்துவிடும். இந்த இரண்டுவித இழுக்கும் இல்வாழ்வுக்கு இடை

யூறு செய்யும். ஆடவன் எப்பொழுதும் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்தவனுக இருக்கவேண்டும். மனைவி அன்பிலே சிறந்தவளாக இருத்தல் முறை. தீரமும் வீரமும் ஆண்பாலின் லக்ஷணம். கருணையும் இரக்கமும் அன்பும் பெண்பாலின் லக்ஷணம். தம்பதிகளுள் அவரவர்க்குரிய பாங்கு முறையாக அமைந்திருத்தல் வேண்டும்.

தாய்மொழி இருவர்க்கும் ஒன்ருதல் அவசியம். தாய்மொழி யொன்றே தங்குதடையற்ற கருவியா யிருந்து இருவருடைய மனப்பான்மையையும் உள்ள படி விளக்கவல்லதாகிறது. வேற்று மொழியானது சாதாரணமான கருத்துக்களை வெளியிடுதற்கு உதவும். ஆனல் இரசம் பொருந்திய கருத்துக்களைக் கலந்து கொள்ளுதற்குத் தாய்மொழி உதவுவது போன்று வேறு எந்த மொழியும் உதவாது. தாய்க்கு நிகரானது தாய்மொழி. மணமக்களுக்கிடையில் உள்ள மனோ பாவத்தை அது உள்ளபடி எடுத்துக் காட்டவல்லது நல்ல மக்கட்பேறு உண்டுபண்ணுதலே விவாகத்தின் முக்கிய நோக்கமாகும். அதற்கு இவ்விதிகளை நிறை வேற்றுதல் வேண்டும்.

விவாகத்துக்கு ஏற்ற வயது

சின்னஞ்சிறு வயதிலேயே விவாகம் செய்து வைக்கும் வழக்கம் அலாதியாக இந்தியாவுக்குரியது. வேறு எந்த நாட்டிலும் இதைக் காண முடியாது. நாகரீகம் பொருந்திய நாட்டுக்கு இது ஒவ்வுமா என்பது கேள்வி

இந்தியப் பெரியார்கள் பல காலங்களில் சமூக சம்பந்தமான பல கேள்விகளைத் துருவி ஆராய்ந்திருக்கிறார்கள். விவாகத்தைப் பற்றிய ஆராய்ச்சியையும் அவர்கள் ஏராளமாகச் செய்திருக்கிறார்கள். பாலிய விவாகத்துக்கு அடிப்படையாக ஒரு கோட்பாடு உண்டு. அதை நிறைவேற்ற முடியுமானால் இளமையிலேயே மணம் முடித்து வைக்கலாம். அப்படி இயலாவிட்டால் விவாகத்தை நெடுநாளைக்கு ஒத்திவைப்பதே நன்று.

மணம்புரிந்து கொள்ளுதல் வெறும் காமநோய்க்கு இடம் கொடுப்பதன் பொருட்டு அன்று. இரண்டு ஆத்மாக்களுக்கிடையிலே மாறாத இணக்கத்தை உண்டு பண்ணுவது மணம். இளமையில் ஏற்படுகின்ற இணக்கம் யாண்டும் அசையாதது. அதைப் பல துறைகளில் காணலாம். பால்மணத்தில் பெற்றோரை அறியாத குழந்தைகளுக்கு வயதுவந்த பிறகு அவர்களிடத்தில் ஆழ்ந்த இணக்கம் உண்டாகாது. பள்ளிக்கூடத்துச் சிறுவர்களுக்கிடையில் விளையும் சிநேகம் ஆயுளெல்லாம் நிலைத்திருக்கும். விருப்பும் வெறுப்பும் வாழ்வில் வடிவெடுப்பதற்கு முன்பே விவாகத்தின் மூலம் ஒரு சிறுவன் ஒரு சிறுமிக்கிடையில் தொடர்வை உண்டு பண்ணிவிட்டால் அது மனமொத்த நட்பாக வளரும். ஒன்றோடு ஒன்று ஒவ்வாத விலங்கு இனத்தில்கூட சிறு வயதில் நல்ல இணக்கத்தை அமைப்பது எளிது.

சிறு வயதில் விவாகம் செய்து வைத்தான பிறகு காம எண்ணங்கள் தலையெடுக்காது தடுத்து வைப்பது அவசியம். அண்ணனும் தங்கையும் இணங்கி வாழ்வது

சாத்தியப்படுவது போன்று மணம் புரிந்துகொண்டவர்கள் அவரவர் பிறப்பகத்தில் எட்ட வசித்திருக்கையில் மனப் பற்றுதலை வளர்க்கலாம். அதற்கிடையில் இருவரும் மாணவன் மாணவியாக இருந்து வாழ்க்கையின் மேலாம் லட்சியத்தைப்பற்றி ஆத்ம ஞானக் கல்வி பயின்றுவர வேண்டும்.

உடல் சம்பந்தமான சிற்றின்பத்துக்காகத்தான் விவாகம் செய்யப்படுகிறது என்று உணருபவர்கள் யௌவனம் நிறைவேறுமளவு மணந்து கொள்ளலாகாது. மணமகனுக்கு வயது இருபத்திரண்டுக்கு மேல் இருபத்தைந்து வரையில் இருக்கவேண்டும். அதே பாங்கில் மணமகளுக்குப் பதினெட்டுக்குமேல் இருபத்திரண்டு ஆகும் வரையில் விவாகம் நடைபெறலாகாது.

இக்காலத்திய சூழ்நிலை பாலிய விவாகத்துக்கு ஏற்றதன்று. ஏனென்றால் எங்கு பார்த்தாலும் சுக போக வாழ்க்கையைப் பற்றிய எண்ணமே பரவி வருகிறது. புலனடக்கம் பொதிந்த யோக வாழ்வைப் பற்றிய எண்ணம் குறைந்துபோய்விட்டது. மனதில் காமநோயை வளர்த்துக் கொண்டிருப்பவர்கள் சிறு வயதில் விவாகம் செய்துகொண்டால் அந்நோயை மேலும் வளர்ப்பவர் ஆவர். எரிகின்ற தீயில் எண்ணெயை வார்ப்பதற்கு ஒப்பாகும் அது. நல்ல வயது வந்த பிறகு விவாகம் செய்வதே உத்தமம்.

அனுஷ்டிப்பதற்கு மிகக்கடினமானது எனினும் மற்றொரு பேருண்மையை மக்கள் அறிந்திருத்தல்

வேண்டும். விவாகம் செய்துகொண்ட பிறகும் போக வாழ்வை நெடிது விலக்கி வைக்குமளவு மக்கள் மேலோர் ஆவர். ஆத்மீக விவாகம் என்பது அதுவே. சான்று ஒன்று இக்கோட்பாட்டை நன்கு விளக்கும். சீதாபிராட்டிக்கு விவாகம் ஆனபொழுது வயது ஐந்து. அவள் அயோத்தியைவிட்டு ஆரண்யத்துக்குக் கணவனோடு போனபொழுது பதினாறு. அவள் மக்கட்பேறு எடுத்தபொழுது அவளுக்கு வயது முப்பத்திரண்டு. விவாகம் செய்துகொண்டவர்க்கும் வாழ்வு எவ்வளவு கட்டுப்பாடுடையது என்பது இதினின்று விளங்கும்.

கலப்பு விவாகம்

கலப்பு விவாகத்தில் இரண்டு பகுதிகள் உண்டு. ரத்தக்கலப்பு என்பது ஒன்று; ஜாதிக்கலப்பு என்பது மற்றொன்று. அவைகளுள் ரத்தக்கலப்பு மணத்தை முதலில் எடுத்துக்கொள்வோம். ஸகோத்தர விவாகம் கூடாது என்று ஏற்பட்டுள்ளது. ஸகோத்தரம் என்பது ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். தாயாதிகள் என்று அது பொருள்படுகிறது. தாயாதிகள் ஒரே ரத்தத்தைச் சேர்ந்தவர்கள். இந்தியாவில் இது பெரிதும் தந்தையைச் சார்ந்தே போகிறது. உடல் தத்துவத்தை ஆராய்ந்து பார்த்தால் தாய் வர்க்கத்திலும் ரத்தக்கலப்பு இல்லாதிருப்பதே உத்தமமானது அதாவது விவாகம் செய்துகொள்ளும் இருவர் தந்தையின் மரபிலோ, தாயின் மரபிலோ ரத்தத் தொடர்வு இல்லாதவர்களாயிருத்தல் வேண்டும்.

இயற்கையின் அமைப்பில் இதற்குச் சான்றுகள் வேண்டியவாறு காணலாம். செடியில் விதை யுண்டாவதற்கு ஆண் மகரந்தம் பெண் மகரந்தம் என இரண்டு மலர்த்தாதுகள் ஒன்றுகூடுகின்றன. ஒரே புஷ்பத்தில் உள்ள மகரந்தங்கள் அங்ஙனம் கூடிஞல் விதை வலிவற்றுப் போய்விடுகிறது. ஒரே செடி ஆஞல் வெவ்வேறு மலர்களின் தாதுக்கள் கூடி விதையுண்டாஞல் அது வலிவுடைத்திருக்கிறது. வெவ்வேறு செடிகளில் உள்ள மகரந்தம் சேர்ந்து விதையுண்டாஞல் அது மிக வலிவுடையதாகிறது. அப்படி மகரந்தம் சேர்தற்குத் தேனீ பெருந்துணே புரிகிறது. ஸ்தாவரம், ஜங்கமம் ஆகிய எல்லா உயிர்களுக்கும் இவ்வுண்மை பொருத்தமானது. ஏற்கனவே ரத்தத் தொடர்வுள்ள ஆணும் பெண்ணும் சேர்ந்து உண்டாகும் சந்தானம் வலிவற்றதாய்விடுகிறது. புதிய ரத்தத்தொடர்வு வீர்யத்தையும் வலிவையும் உண்டுபண்ணுகிறது. உறுதி படைத்த நன்மக்களேப் பெற்றெடுக்க விரும்புபவர் பழைய ரத்தத் தொடர்வு இல்லாத இடத்தில் விவாகம் செய்துகொள்ள வேண்டும்.

எண்ணிக்கையில் குறைந்துள்ள சில ஜாதியார் ஒரு சிறு கூட்டத்துக்குள்ளேயே திரும்பத் திரும்ப விவாகம் செய்கின்றனர். பழைய ரத்தக் கலப்பே அவர்களுக்கு மீண்டும் உண்டாகிறது. அதஞல் அந்த சமுதாயம் விரைவில் க்ஷீணதசையடைந்து விடுகிறது. உடல் உறுதியும் மனத்திட்பமும் அவர்களுக்கு உண்டாகாது. நாளடைவில் சில வர்க்கங்கள் அப்படி

அழிந்துபட்டுப்போவதும் உண்டு. உலகில் உள்ள பல சமுதாயங்களை ஆராய்ந்து பார்த்தால் இவ்வுண்மை விளங்கும்.

ஒரு ஜாதியார் மற்றொரு ஜாதியாரோடு செய்யும் விவாகமும் கலப்பு விவாகம் என்னும் பெயர் பெறுகிறது. இது சம்பந்தமான உயர்ந்ததோர் கோட்பாட்டை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். சமுதாயம் வலிவற்று அழிந்து பட்டுப்போம்படி ஒரே சிறு கூட்டத்துக்குள் விவாகம் செய்வது ஒருவிதக் கேட்டை உண்டுபண்ணுகிறது. தன் பண்பாட்டையும் சீர்மையையும் இழந்துவிடும்படி வேற்று ஜாதியுடன் கலப்பு விவாகம் செய்வது மற்றொருவிதக் கேட்டை விளைவிக்கிறது. ஆசாரத்திலே, நடையுடை பாவனையிலே, பழக்க வழக்கத்திலே, பண்பாட்டிலே, வாழ்க்கையின் லட்சியத்திலே ஒன்றோடு ஒன்று ஒத்திருக்கிற வெவ்வேறு ஜாதியினர் கலப்பு விவாகம் செய்து கொள்ளலாம். நன்மக்களை உண்டுபண்ணுதற்கு ஒரு விதத்தில் அது நல்ல துணைபுரியும்.

இயற்கையானது ஒரு பேருண்மையைப் புகட்டி வருகிறது. நீர்வாழ்வன, நிலத்தில்வாழ்வன, நடப்பன, பறப்பன, ஊர்வன ஆகிய எல்லாவித உயிர்களும் அதனதன் இனத்தையே காத்து வருகின்றன. வர்ண மிச்ரம் அல்லது ஜாதிக்கலப்பு என்பதை சிற்றுயிர்களிடத்தும் காணமுடியாது, பேருயிர்களிடத்தும் காண முடியாது. ஜாதிக்குதிரை அல்லது ஜாதி நாய் என்று சொல்லுமிடத்து அது இனம் கலவாதது என்று

பொருள்படுகிறது. இனம் கலந்ததை இனம் கெட்டது என்கிருேம். இனம் கெட்டதே இர்ப்பந்தி எனப்படுகிறது. இர்ப்பந்தி உயிர்கள் இயற்கையில் நெடிது நிலேத்திருப்பதில்லே. அவைகளின் தரமும் தகைமையும் குறைந்துவிடுகின்றன. மக்களுள் ஐரோப்பிய இனம், ஆப்பிரிக்க இனம், இந்திய இனம், மங்கோலிய இனம் ஆகியவைகளுள் கலப்பு ஏற்படுவது பொருந்தாது. நல்ல பாங்குடைய மக்கள் அத்தகைய கலப்பினின்று உண்டாகமாட்டார்கள். சீர்மை கெட்ட சிற்றினமே வர்ண சங்கரத்தின் விளேவு ஆகும். உடல் அமைப்பிலும், மனபரிபாகத்திலும், வாழ்க்கை முறையிலும் ஒன்ருேடு ஒன்று ஒத்துள்ள அக்கம் பக்கத்து இனங்களுள் கலப்பு விவாகம் பண்ணுவதில் கேடு இல்லே. முறைமை வழுவாத ஜாதிக்கலப்பு பாராட்டத்தக்கது. உடல் அமைப்பிலும் உள்ளத்தின் பரிபாகத்திலும் மேன்மையுற்று விளங்குதலே முறைமையோடு கூடிய ஜாதிக்கலப்பின் விளேவு ஆகும். மணம் செய்துகொள்ளுதலின் முக்கியமான நோக்கம் நன்மக்களே உண்டு பண்ணுதல் என்பதை யாண்டும் கருத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

காதல் மணம்

விதவிதமான விவாகங்கள் வழக்கத்தில் இருந்து வருகின்றன. கந்தர்வ மணம், களவு மணம் முதலியன சமூகத்தால் அங்கீகரிக்கப்படாதவைகளாம். இந்தியாவில் இப்பொழுது வழக்கத்தில் இருந்து வருவது கற்பு

மணம். மேல் நாடுகளில் தென்படுவது காதல் மணம். இருவர்க்கிடையில் காதல் வலுத்த பின்பு செய்யும் விவாகம் அதுவேயாம். காதல் மணத்தை ஆதரிப்பவர் கையாளும் கொள்கை யொன்று உண்டு. பெற்ருேர் போன்ற பிறர் கண்கொண்டு காண்பது காதல் அல்ல என்பது அக்கொள்கையாம். பிறருடைய கட்டளைக்கு அடிபணிந்து காதலே வளர்ப்பது எங்ஙனம், என்பது அதன் கருத்து. இக்கொள்கையானது மிக மேலான தாக யுவர்களுக்கும் யுவதிகளுக்கும் தோன்றலாம். ஆனல் அக்கொள்கையானது முற்றிலும் பொருள் அற்றது என்பதைத் தத்துவம் அறிந்த பெரியோர்நிரூபித்துக் காட்டியிருக்கின்றனர். காதல் என்பது காமத்துக்கு ஏற்பட்ட கண்ணியப் பெயர். காமத்துக்குக் கண் இல்லை என்பதுதானே எல்லோர்க்கும் ஒப்ப முடிந்த கோட்பாடு! மன்மதனைக் குருடனாகவன்ருே உலகனைத்தும் கருதிவருகிறது? குருடனுக்குக் குருடன் வழிகாட்ட முடியாது. கண்ணுடைய வேறு ஒருவன் குருடனைக் கையைப் பிடித்து அழைத்துச்செல்ல வேண்டும். காதல் கொண்ட இருவர்க்கு அவர்களின் பெற்ருேருடைய ஆமோதிப்பும் இன்றியமையாதது என்பதைக் கருத்தில் வைப்போம்.

மேல்நாடுகளில் மேவிவரும் காதல் விவாகம் அதி விரைவில் புனிதத்தை இழந்து வருகிறது என்பதுகண் கூடு. வண்டிக்கு இரண்டுமாடுகள் ஒத்திருக்கின்றனவா என்று அவைகளை மாற்றி மாற்றிப் பூட்டிப் பார்ப்பது போன்று காதலர் இருவர் கருத்து ஒத்திருக்கின்றனவா

என்று தாற்காலிகமாகச் சேர்ந்திருந்து ஆராய்ச்சி செய்து பார்க்கின்றனர். ஒருவர்க்கொருவர் ஒத்துக் கொள்ளாவிட்டால் பிரிந்துபோய் வேறு ஒருவருடன் இதே ஆராய்ச்சியைத் திரும்பவும் செய்கின்றனர். விலங்கு இனத்தின் புல்லிய செயலைச் சார்ந்தது அது. புனிதம் வாய்ந்த மாந்தர்க்கு அது ஒவ்வாது. மேல் நாடுகளில் விவாக ரத்து ஏராளமாக நிகழ்வது அதன் விளைவு ஆகும். பெண் ஒருத்தி பல தடவைகளில் பல பேரை மாற்றி மாற்றி மணக்க நேர்ந்தது என்பது பாராட்டத்தக்க செயல் ஆகாது. மணம் செய்து கொள்ளுதலின் மேலாம் நோக்கம் நன்மக்களைப் பெறு தலாம். பிறந்து வளர்ந்துவரும் மகன் ஒருவன் தன் தாய்க்குப் பல கணவர் இருந்திருக்கின்றனர் என்று உணருங்கால் அவனுடைய புனிதம் போய்விடுகிறது. மேலான சமுதாயம் அவனை நன்மகனாக அங்கீகரிக் காது.

காதலின் விளைவு விவாகம் என்பது மேல்நாட் டவர்கள் கொள்கை. விவாகத்தின் விளைவு காதல் அல்லது அன்பு என்பது நம் தேசத்தின் கொள்கை. இதை ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால் விவாகத்தில் காதலருடைய காதல் பூர்த்தியாவது மேல்நாட்டு முறையின் பயன் ஆகும். பூர்த்தியான ஒன்று மேலும் வளர்தற்கு இடமில்லை. ஆகவே விவாகத்துக்கப்பால் புதிய அன்பு ஒன்றும் தம்பதிகளுக்கிடையில் உண்டா வதற்கு இடமில்லை. இந்தியமுறையின்படி விவாகத் திலே அன்பு துவங்குகிறது. அது எந்த நிலைக்குச் செல்

லக்கூடுமென்பதற்கு நாளடைவில் அவர்களுடைய ஜீவிதமே சான்று ஆகும். விவாகம் பண்ணிக்கொள்ளும் வரையில் காதல்கொள்ளாது இருக்கமுடியுமா என்னும் கேள்வி பிறக்கிறது. யாரிடத்தும் காதல் கொள்ளாது மனதைக்காப்பது விரதம் என்பது நம் தேசியக்கோட்பாடு. அதன்படியே பல்லாயிரம் ஆண்டுகளாக நம் சமுதாய வாழ்வு நடைபெற்று வந்திருக்கிறது. இது மிகவும் உயர்ந்த ஏற்பாடு என்பதற்கு இத்தனைகாலம் இது திருப்திகரமாக நிகழ்ந்து வந்திருப்பதே நமக்கு எடுத்துக்காட்டு ஆகின்றது.

மணந்து கொண்ட பிறகு அன்பை வளர்ப்பது சாத்தியமா என்னும் கேள்வி எழலாம். மணந்து கொள்ளுதற்கு முன்பு மணமக்கள் ஒருவரை ஒருவர் பார்ப்பதற்குக்கூட சிலவேளைகளில்சந்தர்ப்பம்வாய்ப்பதில்லை. அப்பொறுப்பெல்லாம் பெற்றோர்க்கு உரியதாய் வந்திருக்கிறது. பெற்றோர் பார்த்து யாரை வாழ்க்கைத்துணை என்று நியமிக்கின்றனரோ அப்பெயர்வழியை மணமகன் அல்லது மணமகள் ஏற்றுக்கொள்ளவேண்டியதாகிறது. இதுமுறையா, நியாயமா என்றும் வினவுகின்றனர். நெருங்கிய மற்ற உறவினரெல்லாம் இப்போக்கிலேதான் அமைந்திருக்கின்றனர் என்பதை நாம் எண்ணிப்பார்ப்பதில்லை. தாய் அன்புக்கு நிகரானது எதுவும் இத்தரணியில் இல்லை. தாயின் அன்பை சேய் ஒன்று ஆராய்ச்சிசெய்து பார்த்த பின்பா பெறுகிறது? நான் யாரை எனக்குத் தாயாக நியமித்துக்கொள்ளவேண்டும் என்ற ஆராய்ச்சி ஒன்று

மில்லாதே இயற்கையின் வசப்பட்டதாக ஒரு ஜீவன் ஒரு தாய்க்குக் குழந்தையாக வந்து பிறக்கிறது. அப்படிப்பிறந்த குழந்தையை இங்குவந்துள்ள நீ யாரோ என்று வேற்றுனை விசாரிப்பது போன்று விசாரித்துக் கொண்டே தாய் தொட்டில் பாட்டு பாடுகின்றுள். வேற்றுனுக இருந்த ஜீவன் பிறகு அந்தத் தாயோடு நெருங்கிய இணக்கம் கொண்டு அன்பை வளர்க்கிறது. தாய் கெட்ட சுபாவம் உடையவளாயிருந்தால்குழந்தை அதைப் பொருள்படுத்துவதில்லை. அன்பின் வலிவால் தாயின் கெட்ட சுபாவத்தையும் நல்லதாகப் பொருள் படுத்துகிற பாங்கு வந்துவிடுகிறது. இந்தத் தாய் வேண்டாம், வேருெரு தாயை நான் தேடி எடுத்துக் கொள்கிறேன் என்று குழந்தை போய்விடுவதில்லை. அதே பாங்கில் பொல்லாத சேய் எனினும் பெற்ற தாய் ஒருநாளும் அதைப் புறக்கணிப்பதில்லை. இப்படி ஒருவர்மீது ஒருவர் தாயும் குழந்தையும் பாராட்டுகிற அன்பு ஆராய்ச்சியின் பயன் அன்று; இயற்கையின் நியமிப்பை ஏற்றுக்கொண்டதின் விளைவு அதுவாம். அதேவிதத்தில் தந்தைக்கும் மகனுக்கும் உள்ள இணக்கம் மாருது வந்தமைகிறது. உடன்பிறந்த சகோதர சகோதரிகளுக்கிடையில் அதேவிதத்தில் இணக்கம் வேரூன்றுகிறது. பெற்றேரையும் உடன் பிறந்தாரையும் நம் விருப்பப்படி நாம் பொறுக்கி எடுக்கவில்லை. இயற்கையில் அமைந்ததை அமைந்தவாறு ஏற்றுக்கொண்டோம். அந்த இயற்கையின் அமைப்பைவிடச் சற்று சிறந்ததாகவே இருக்கிறது,

பெற்றோரைக்கொண்டு மணமக்களின் பொருத்தத்தை நிலைநாட்டுதல் என்பது. இரு குடும்பத்தார் சம்மந்திகள் ஆவதற்குத் தகுந்தவர்களா என்று தங்களுக்குள்ளே தீர்மானிக்கின்றனர். அவர்கள் செய்துள்ள தீர்மானத்தின்படி மணமக்களுக்கிடையிலும்இணக்கம் ஏற்படுகிறது. புதிதாகப் பிறந்த ஓர் உயிருடன் இது என் உடன் பிறந்தது என்று இணக்கம் கொள்ளுதல் போன்று புதிதாக மணந்த ஓர் உயிரை இது என் வாழ்க்கைக்குத் துணையாக அமைந்துள்ளது என்று ஏன் இணக்கம் பாராட்டலாகாது? அத்தகைய பாராட்டுதலே இந்நாட்டில் வெற்றிகரமான அமைப்பாக அமைந்திருக்கிறது. ஆக, பெற்றோரின் துணைகொண்டு விவாகம் முடிப்பதே சாலச்சிறந்தது ஆகும்.

கற்பு

மணந்துகொண்ட இருவர்க்கிடையில் உள்ள ஒன்றுபட்ட மனநிலை கற்பு எனப்படுகிறது. மணந்துகொள்ளுதற்கு முன்பும், மணந்துகொண்ட பிறகும் மனதை முற்றும் தன் வசத்தில் அடக்கிவைத்திருப்பது கற்புநிலைக்கு முதற்படியாகும். மனதை அடக்கியாளத்தெரிந்துகொள்ளாதவன் மகன் எனப்படமாட்டான். மனதை அடக்கியாளத் தெரிந்துகொள்ளாதவள் மகள் எனப்படமாட்டாள். அடங்காத மனம் போகும் போக்கில் போகின்றவர் மாக்கள் ஆவர். மனதின் வேகத்தைத்தணித்து,செந்நெறியிலே அதைச் செலுத்துவோரே நன்மக்களாம். ஆக, கற்பு என்னும்

பெருநிலை சிதறடைந்த மனமுடையவர்க்கு ஒருநாளும் சொந்தமன்று. மனதுக்கு அரசனும், மனதுக்கு அரசியும் கற்பு நிலையிலே செல்லத் தங்களை ஆயத்தப் படுத்தியாய் விட்டவர் ஆகின்றனர்.

கற்பினுக்கு அரசு ஆக விரும்பும் யுவனும் அரசியாக விரும்பும் யுவதியும் அடுத்தபடியாகத் தங்களைத் தங்கள் பெற்றோரிடம் ஒப்படைத்து விடவேண்டும். ஏனென்றால் தங்கள் உடல் வாழ்வு தங்களுக்கு உரிய தாய் இருப்பதைவிட அதிகமாகத் தங்கள் பெற்றோர்க்கே உரியதாயிருக்கிறது. பெற்றோர்க்கு அடிபணியுமளவு யுவனும் யுவதியும் சமுதாயத்துக்கு அடிபணிபவர் ஆகின்றனர். பிறகு சமுதாயத்துக்கு நல்ல தொண்டர் ஆகவும் முடியும். தாய் தந்தையர்மீது பூரண விசுவாசம் வைத்திருப்பவர்க்கே தங்கள் விவாகத்தையும் பெற்றோர் வசத்தில் விட்டுவிடமுடியும். பெற்றோர் அனுமதிக்கு உட்பட்டுக் காதலர் ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்துவது கற்பின் இரண்டாவது படியாகும். காமத்துக்கு வசப்பட்டவர் பெற்றோர்க்கு அடங்கமாட்டார்கள். பெற்றோர்க்கு அடங்கி நடப்பவர் காமத்தை வென்றவராம். கற்பு நிலைக்கும் அன்னவர் தகுதியுடையவர் ஆகின்றனர்.

மூன்றாவதாகக் கற்பு என்பது ஆண் பெண் ஆகிய இருபாலார்க்கும் பொதுவானது. அது அலாதியாகப் பெண்ணுக்கே அணிகலம் என்றும், ஆண் ஆனவன் அதை அதிகமாக அனுஷ்டிக்க வேண்டியதில்லையென்றும் கருதுவார் உளர். அக்கொள்கையானது

வாழ்க்கைத் தத்துவத்துக்குப் பொருந்தாது. காத லித்து, இருவர் கருத்து ஒருமித்து, ஆதரவுபட்டதே இன்பம் என்பது கோட்பாடு. இயற்கையில் சிற்றுயிர் களிடத்துத் தனிச் சிறப்புக்கள் சில தென்படுவதுண்டு. கற்பு என்னும் சிறப்பைப் புரு இனத்தின்கண் காண லாம். ஆண் புருவும் பெண் புருவும் ஜோடி சேர்கின் றன. சேர்ந்தபின் அவைகள் பிரிவதில்லை. வேற்றுப் புருவுடன் இணைசேர்தல் என்ற அடாத செயலை அவை களிடத்துக் காணமுடியாது. ஜோடியில் ஒன்று செத் துப் போய்விட்டால் மற்றது தனித்திருந்து காலம் போக்கும், அல்லது துயருற்று மடிந்துபோம்; மற்றொரு புருவை வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொள்ளாது.

பெண் ஒருத்தி தற்கொண்ட தலைவன் ஒருவ னுக்கே உரியவள் ஆகின்றாள். வேறு ஒரு கணவனைக் கனவிலும் தீண்டுதல் இல்லை. ஆடவனும் அதே செய லைச் செய்யக் கடமைப்பட்டுள்ளான். மனைவியிருக்க மறுமணம்செய்பவன் மாக்கள்கூட்டத்தைச்சேர்கிறான். மனதை அடக்கியவன், காமத்தை வென்றவன் சந்ததி யின் பொருட்டோ அல்லது வேறு பல சீரிய காரணங் களை முன்னிட்டோ மறுமணம் புரியலாம்; எனினும் அது பாராட்டத்தக்க செயலன்று. ஏகபத்னீ விரதத் துக்கு ஸ்ரீ ராமன் சிறந்ததொரு சான்று ஆகிறான்.

உடல் இரண்டு, உள்ளம் ஒன்றுஎன்னும் உயர்ந்த நிலையானது கற்பு என்னும் பெயர்பெறுகிறது. இரண்டு கைகள் ஒரே உடலுக்கு உரியவைகளாயிருக்கின்றன.

இரண்டில் ஒரு கைக்கு ஊனம் ஏற்பட்டு விட்டால் மற்றது அதிகமான பொறுப்பு ஏற்றுக் கொள்கிறது. குறைபட்ட கையைக் குறித்து மற்றது குறை கூறுவதில்லை. ஏனென்றால் இரு கைகளுக்கும் பொதுவாயிருக்கும் உள்ளம் ஒன்றே. அங்ஙனம் கணவனுக்கும் மனைவிக்கும் உள்ளம் ஒன்றுபட்டு விடுவது கற்பு. பண்பட்ட உள்ளமே ஒன்று மற்றொன்றில் லயமாகவல்லது. அப்படி இரண்டு உள்ளம் ஒன்றுபட்டு விடுவதே அன்பு நிலையாகும். பிரதிபலன் எதையும் அன்பு கேட்பதில்லை. தன்னிடத்து இருப்பதையெல்லாம் அது வாரியெடுத்து வழங்கி விடுகிறது. ஒருவரிடத்தில் உள்ள குற்றத்தை மற்றவரிடம் உள்ள குணமானது சிரமமின்றிச் சீர்ப்படுத்தி விடுகிறது. விவாதங்கள் புரிதற்கும் நல்லுபதேசங்கள் செய்தற்கும் ஆங்கு அவசியம் ஏற்படுவதில்லை. மனதை மனதே பண்படுத்துகிறது. அன்பினுக்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்னும் கோட்பாட்டைக் கற்பு ஆனது உருப்படுத்துகிறது. கற்புடைய மாது ஒருத்திக்குக் கணவன் எவன் ஆயினும் அவன் தெய்வமே. அவள் கொண்டுள்ள அத்தகைய மனப்பான்மையினால் அவன் தெய்வமாகவே திருந்தி விடுகிறான். கற்புடைய கணவன் ஒருவனுக்கு வாய்த்த மனைவி எவள் ஆயினும் அவள் அம்பிகையின் அருள் வடிவமே. அத்தகைய மனநிலையானது அவளை அருள் சொரூபமாகத் திருத்தி விடுகிறது. பரஸ்பர ஒற்றுமை கற்பின் விளைவாம்.

தபசு

பூமியில் இரண்டு இடங்களினின்று கொண்டு வருகிற நீர் இரண்டு விதமான சுவையுடையவைகளாக இருக்கும். பின்பு அவைகளைச் சுத்தப்படுத்துமளவு சுவையில் அவைகள் ஒன்றித்துவிடுகின்றன. இல்வாழ்வு நடாத்துகின்ற கணவனும் மனைவியும் தங்களுடைய இயல்பு முற்றிலும் ஒன்றுபட்டு விடும்படி செய்வது தபசு ஆகும். வனத்திலே சென்று அன்னபானமின்றி உடலை வாட்டுவது இல்வாழ்பவரது தவம் ஆகாது. இல்லக் கடமைகளை இருவரும் மகிழ்வுடன் நிறைவேற்றுவது தவச்செயல் ஆகும். மணம் முடிப்பதற்கு முன்பு அவரவர் பெற்றோர் தெய்வம் போன்று கருதப்பட்டனர். விவாகம் செய்துகொண்ட பிறகு அவரவர்க்கு வாய்த்த மாமனாரையும் மாமியாரையும் தெய்வமாகப் பாராட்டுதலில் தவச்செயல் துவங்குகிறது. பிறகு புதியதாய் அமைந்துள்ள சுற்றத்தாரோடு நெருங்கி உறவாடுதலும் இல்வாழ்பவனுடைய தவமாகும். ஏனென்றால் மன்னுயிரையெல்லாம் தன்னுயிர் போன்று உணர்தலும் தவத்தின் விளைவாம். உற்றார்க்கு உரிய கடமையைச் செய்தபின், முன்பின் அறியாத வேற்றார்க்கும் அதே பணிவிடையைச் செய்தல் வேண்டும். இது அதிதி சத்காரம் அல்லது விருந்தோம்பல் என்னும் பெயர் பெறுகிறது. முடிவாக மானுடர் மட்டுமல்ல, எல்லா ஜீவ ஜந்துக்களிடத்திலும் அன்பாயிருத்தல் தவத்தின் உச்ச நிலையாகும். யார் ஒருவனுடைய வாழ்வினின்று உயிர்கள் அனைத்தும் இன்பம் பெறுகின்றனவோ அவனுக்கு சான்றோர் மக்களாக வந்து பிறப்பது வாழ்க்கைத் தத்துவமாகும்.

தெய்வம் தொழுதல் சான்ருேர்க்கு உற்ற செயலாகும். உண்பதும் உறங்குவதும் உயிர்கள் அனைத்துக்கும் இன்றியமையாத நித்திய கர்மங்களாம். அதே பாங்கில் கடவுள் வழிபாடு நல்லாரது நித்திய கர்மமாகிறது. மனத்தூய்மையும் தெளிவும் தேவாராதனையினின்று உண்டாகின்றன. தம்பதிகளுக்கிடையில் தேவாராதனை இரண்டு விதமானதாய் இருக்கலாகாது. கணவன் கையாளும் உபாசனு முறையே மனைவியினிடத்திலும் அமைந்திருக்கவேண்டும். நித்திய பூஜையிலும் கிரியைகளிலும் இரண்டு கைகள் ஒன்றுக்கொன்று துணைபுரிவது போன்று தம்பதிகள் பங்கெடுத்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றனர். இஷ்டமூர்த்தி அல்லது வழிபடு தெய்வம் இருவர்க்கும் ஒன்ருயிருத்தல் அவசியம். உதாரணமாக கணவன் சிவத்தை ஆராதித்தால் மனைவியும் அப்படியே செய்ய வேண்டும். அல்லது நாராயண உபாசனை யென்ருல் இருவர்க்கும் அது பொதுவாயிருப்பதே பொருந்தும். தெய்வ பக்தியும் உபாசனையும் ஓங்குமளவு இல்வாழ்வு புனிதமடைகிறது.

ஏழைகளை ஆதரித்தல், பொதுநல சேவையில் ஈடுபடுதல் ஆகியவை இருவர்க்கும் இன்றியமையாதசெயல்களாம். இனித் தாம் பெறப்போம் மக்களை என்ன பாங்குடன் பராமரிப்பார்களோ அதே பாங்குடன் பிறரைப் பராமரிப்பது முற்றிலும் அவசியமாம்.

குறையை நிறைவேற்றுவதற்காகத் தவம் புரிதல் என்பது வழக்கத்தில் வந்துள்ள கொள்கையாகும்.

ஆனால் உண்மையில் நிறை நிலையானது மனத்தகத்தே இருக்கிறது. ஏனென்றால் மனதில் வறுமை நோய் பிடித்துள்ளவர்களுக்குச் செல்வம் எவ்வளவு இருந்தாலும் அவர்கள் வறியராகவே நடந்து கொள்வார்கள். நிறை மனது உடையவர்களுக்கு வருவாய் மிகச்சொற்பமாயினும், அதற்கிடையில் மங்களமான நிறைவாழ்வு வாழமுடியும். சிக்கனமான வாழ்வு வாழ்வது வாழ்க்கைப் பயிற்சியாகும். படைத்திருக்கும் பொருளையெடுத்து அவரவர் தரத்துக்கு ஏற்பப் பிறர்க்கு வழங்கிக்கொண்டேயிருப்பது அருளைப் பெறுதற்கு உற்ற உபாயமாகும். அருள்நிலை தவத்தின் விளைவு ஆகும். உலோகத்தை உலையில் இட்டு உருக்குமளவு அது அழுக்கு நீங்கப் பெறுகிறது. அங்ஙனம் தவநெறியில் ஒழுகுமளவு தம்பதிகளுக்கு மனதின் மாசு நீங்குகிறது; மனத்தெளிவு உண்டாகிறது; அருள்நிலை தோன்றுகிறது. அதாவது உலகெங்கும் மிளிரும் தெய்வீகம் அவர்கள் காட்சிக்குப் புலப்படுகிறது. அத்தகைய பரிபாகம் அடைந்துள்ள தம்பதிகள் நன்மக்களைப் பெறத் தகுதியுடையவர் ஆகின்றனர். நல்லார்க்கு வாய்க்கும் செல்வத்துள் தலைசிறந்த செல்வம் மக்கட் செல்வம். மேலைத் தவத்தளவே யாகுமாம் அங்ஙனம் நல்லாராகிய தாம் பெற்ற செல்வம். ஆக, நன் மக்களைப் பெறுதற்பொருட்டு இல்வாழ்பவர் அருந்தவம் புரியக் கடமைப்பட்டிருக்கின்றனர். ஈண்டு நாம் பகர்ந்துள்ள வாழ்க்கைமுறை யனைத்தும் ஒன்றுகூடி இல்வாழ்பவரின் தவம் என்னும் பெயர் பெறுகிறது.

துன்பத்தை ஏற்கும் முறை

இவ்வுலக வாழ்வில் துன்பம்கலவாத இன்பமில்லை. இவ்வுலக வாழ்வு வேண்டுமென்று விரும்புபவர் துன்பம் துய்ப்பதற்கும் ஆயத்தமாயிருக்கவேண்டும். வலியப்போய்த் துன்பத்தை எடுத்துத் தலையில் போட்டுக் கொள்ளவேண்டியதில்லை. தானாகவே அது வந்தமையும். துன்பத்தை தெய்வ சகாயம் என்று சொல்ல வேண்டும். ஏனென்றால் நம்மைப் பண்படுத்துதற்கு உற்ற உபாயங்களுள் துன்பத்துக்கு நிகரானது ஒன்றுமில்லை. ஏற்கவேண்டிய முறையில் துன்பத்தை ஏற்றுக்கொண்டால் அது நம்மை மேலோராக மாற்றுகிறது. மற்று, நாம் அதற்கு அடிமைப்பட்டு நெறிபிறழ்ந்து போய்விட்டால் அது நம்மைக் கீழ்மையில் ஆழ்த்துகிறது.

நோய்வாய்ப்படுதல், நம்பிக்கைத் துரோகம், பொருள் நஷ்டம், பகைவர் பண்ணும் கேடு, உற்றாரின் அகாலமரணம் ஆகிய இவை போன்றவை யாருக்குமே துன்பத்தை விளைவித்துவிடும். அப்படி வலியவந்தமையும் துயரத்தை ஏற்றுக்கொள்ளுதலில் பொலியும் பண்புகளே ஒருவனைப் பன்மடங்கு பெரியவன் ஆக்கிவிடுகின்றன. எல்லாத் துயரங்களையும் துய்த்துக் கொண்டிருப்பதற்கிடையில் அவைகளை வெளியில் யாருக்கும் விளம்பரம் செய்யாதிருப்பது பொறுமையாகும். அதனால் உள்ளம் பன்மடங்கு அதிகம் வலிவு பெறுகிறது. துயருற்றார் பலர் தம் கடமையைச் செய்யாது தேம்பித் திரிவார்கள். மற்று, மனவேதனைகள்

அனைத்துக்குமிடையில் தம் கடமையினின்று தவறு திருப்பவர்கள் விவேகத்தை வளர்ப்பவர் ஆகின்றனர். மனத்தளர்வுக்கும் துயரத்துக்கும் ஏதுவான நிகழ்ச்சிகளே ஒரு மனிதனுடைய தரத்தை எடுத்துக் காட்டுகின்றன. வேதனைகளில் அழுந்தி அழுந்தி அவைகளைச் சகித்திருப்பவன் வேதனைகளை வென்றவன் ஆகின்றான். விஷத்தைச் சிறிது சிறிதாக உண்டு ஜீரணம் செய்து பழகியவனை விஷம் ஒன்றும் செய்யாது. உலகையே விழுங்கவந்த விஷத்தை சிவபெருமான் விழுங்கி அமிர்தமாக மாற்றிவிட்டார். துன்பத்தையெல்லாம் சகித்துப் பழகியவனுக்குத் துன்பமும் இன்பமும் ஒன்றுபட்டு விடுகின்றன. நன்மக்களைப் பெறுதற்கும் துன்பத்தைச் சகித்தற்கும் என்ன தொடர்வு கிடக்கிறது என்ற கேள்வி ஈண்டு எழலாம்.

காற்றில் அசைந்து அசைந்து ஒடிந்து போகாது வலிவு பெற்றுள்ள மரம் நல்ல விதையை உண்டுபண்ணத் தகுதியுடையதாகிறது. துன்பத்தில் தோய்ந்து கிடந்து துன்பத்தில் தன் தகைமையை இழந்துவிடாதவனே இறைவன் ஆகிறான். அதாவது மேன்மையனைத்துக்கும் தக்க இருப்பிடம் அவனும். சான்று ஒன்று இரண்டு எடுத்துக்கொள்வோம். வனவாசம் என்ற துக்கத்தை ஸ்ரீ ராமபிரான் ஏற்றுக்கொண்ட முறையே அவனைப் பண்படுத்தியது. வனவாசம் பண்ணிப் பைத்தியம் பிடித்துப் போகின்றவரும் உண்டு. வனவாசம் பண்ணிப் பண்பட்டான் ஸ்ரீ ராமன். துக்கத்துக்கு ஏதுவான செயலைத் தனக்கு அனுகூலமான

செயலாக அவன் மாற்றிக்கொண்டான். தனது பண்பையும் பராக்கிரமத்தையும் வெளிப்படுத்துதற்கு வனவாசம் வகையாயிற்று. தர்மராஜா யுதிஷ்டிரனும் அதே பாங்கில் வனவாசத்தைப் பயன்படுத்திக் கொண்டான். அரண்மனையின் சுகஜீவனம் அவர்களை அத்தகைய மேலோர்களாக ஆக்கியிருக்க முடியாது.

இராவணன் கையில் அகப்பட்டுக்கொண்டு சிறை கிடந்த செல்வி சீதாபிராட்டியானவள் சிறைவாசத்தாலேயே தனது சிறப்பை வெளிப்படுத்தினாள். அதற்கெல்லாம் மேலாக அவள் கர்ப்பிணியாகக் காட்டுக்கு அனுப்பப்பட்டபோது நடந்துகொண்ட முறையே ஒப்பற்றதாகிறது. தனது வயிற்றிலே வாய்த்த சிசு அல்லது சிசுக்கள் பொருட்டு எத்தகைய சாந்தம், சகிப்புத்தன்மை, உறுதி, வீரம், தவநெறி முதலியன வாய்க்கப்பெற்றவளாக அவள் நடந்துகொண்டாள் என்பது உலகறிந்த விஷயமாகும். துன்பத்தையெல்லாம் சகித்து அவள் துன்பத்தை வென்றாள். துன்பத் தீயில் இட்டு அவள் தன்னைத் தூயவள் ஆக்கிக்கொண்டாள். நன்மக்களைப் பெறத் தகுதியுடையவளாக அவள் தன்னை மாற்றிக்கொண்டாள். கஷ்டங்களையும் நஷ்டங்களையும் துன்பங்களையும் துயரங்களையும் தங்களுடைய சொந்த மனபரிபாகத்துக்காகப் பயன்படுத்திக்கொள்ளத் தெரிந்துகொண்டவர்களே நன்மக்களைப் பெறுவதற்கான பெற்றோர் ஆகின்றனர்.

பிள்ளைவரம்

உயிர்கள் ஓயாது உலகில் பிறந்துகொண்டிருக்கின்றன. அவர்களுள் சிற்றுயிர்கள் அனைத்தும் ஒருகோட்பாட்டில் வந்து அடங்குகின்றன. அதாவது ஆணிடத்திலும் பெண் இடத்திலும் உள்ள காமமே அவைகளின் பிறப்புக்கு முதல் காரணமாகிறது. உயிர்களிடத்துக் காமம் இல்லாது போய்விட்டால் அவைகளின் இனப்பெருக்கம் இல்லாதுபோய்விடும். பின்பு சிருஷ்டித் தொழிலே தடைப்பட்டுவிடும். ஆனால் தன்னை அழித்துக்கொள்ளுதல் இயற்கையின் திட்டமன்று. எல்லாவிதமான உயிர்வகைகளும் எண்ணிக்கையில் பெருகி விரிவடைந்துகொண்டே வரவேண்டும். அதன்பொருட்டுக் காமம் அவைகளிடத்து இயல்பாக அமைந்திருப்பது அவசியமாகிறது. யாரிடத்திலிருந்தும் கற்றுக்கொள்ளாது தானே சுயம்புவாகத்தோன்றி வரும் தன்மையுடையது காமம். இக்காரணத்தை முன்னிட்டே சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மாவும் "சுயம்பு" என்று அழைக்கப்படுகிறார்.

இனி, மக்களுடைய சிருஷ்டியில் மட்டும் இரண்டு விதமான பிரிவுகள் உண்டு. அவ்விரு பிரிவுகளைக் காமப் புதல்வர்கள் என்றும் தவப் புதல்வர்கள் என்றும் பாகுபடுத்துவது உண்டு. மற்ற சிற்றுயிர்கள் ஏராளமாகத் தோன்றிவருவது போன்று உண்டாகின்ற மக்களெல்லாம் காமப்புதல்வர்களாம். பெற்றோர் உள்ளத்தை உடற்றும் காம நோயே அவர்கள் உலகில் தோன்றி வந்திருப்பதற்குக் காரணமாகும்.

காமப் புத்திரர்களை ஈன்றெடுத்தவர்கள்பெயரளவிலே தான் பெற்றோர்கள். மன்மதன் அல்லது காமன் உண்மையான பிதாவாகிறான். ஆகவே காமப் புதல்வர்கள் எல்லோரும் மாக்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இன்றைக்கு உலகெங்கும் மாக்கள் அல்லது காமப் புதல்வர் ஏராளமாகத் தோன்றுகின்றனர். ஆண்டுதோறும் அவர்களின் ஜனத்தொகையானது புற்று ஈசல் போன்று பெருகிக்கொண்டே போகிறது. நெறியையும், நேர்மையையும், அடக்கத்தையும் அவர்கள்பால் காணமுடியாது. எவ்விதமான சட்ட திட்டத்திலோ, கட்டுப்பாட்டிலோ அடங்காத கேடுகள் பல உலகில் தலை விரித்து ஆடித் திரிவதற்குக் காரணம் காமப் புதல்வர்களேயாம்.

ஆரியன் என்னும் சொல் ஒரு ஜாதியைக் குறிக்கிறது என்று பலர் எண்ணுகின்றனர். பண்பாடு அடைந்தவன் என்றே உண்மையில் அது பொருள்படுகிறது. தவத்தின் பயனாகப் பிறந்தவன், பிரார்த்தனை பண்ணி தெய்வப் பிரசாதமாகத் தோன்றியவன் ஆரியன் என்கிறது மனுஸ்மிருதி. அத்தகைய ஆரியனை அல்லது நன் மகனைப் பெற்றெடுப்பது மேலோர் கடமையாகும். காமத்தை வென்றவர்க்கே தவம்புரிய முடியும். காமத்தை வென்றவர்க்கே உண்மையான கடவுள் வழிபாடு செய்யமுடியும். தங்களுக்கு நன் மகன் ஒருவன் வாய்க்கவேண்டுமென்று இல்வாழ்பவர் இறைவனிடம் நெடுநாள் வணங்கி விண்ணப்பிக்க வேண்டும். நன் மகனிடத்து இருக்கவேண்டிய

நலத்தை யெல்லாம் எண்ணி யெண்ணி, இனிப் பெற்றோர் ஆகப்போம் தாங்களே அந்த நலத்தின் வடிவு ஆய்விடவேண்டும். எத்தகைய மகவு இவர்களுக்கு வாய்க்கப்போகிறது என்பதை இவர்களின் தவநிலையே விளக்கிவிடும்.

புதியதாக ஒரு பட்டணத்துக்குள்ளே வருபவர்களுள் ஒவ்வொருவரும் அவரவர் அந்தஸ்துக்கு ஏற்ற இருப்பிடம் தேடுவர். ஏழை ஒருவன் தன் தரத்துக்கு ஒத்த சிறு வீடு அல்லது குடிசையைத் தேடிக்கொள்வான். சுமாரான செல்வம் படைத்தவன் அதற்குத் தகுந்த இடம் பிடிப்பான். பெருஞ் செல்வம் படைத்தவன் மாளிகைபோன்ற வீடு பிடித்து அதில் வசிப்பான். குடியிருக்கும் வீடே ஒருவனுடைய பொருளாதாரத்தை ஒருவாறு விளக்கிவிடும். அதே பாங்கில் மண்ணுலகில் பிறக்கும் ஆத்மாக்கள் அவரவர் இயல்புக்கு ஏற்ற பெற்றோரை நாடிப்போகின்றனர். இது பிறப்பு எடுப்பதைப்பற்றிய விதியொன்று ஆகும். பெருமக்களுக்கு ஏற்ற வசதியான வீடுகள் ஓர் ஊரில் இல்லாவிட்டால் அவர்கள் ஆங்குப் பயணம் போக மாட்டார்கள். தங்களுக்குத் தகுந்த நல்லூரை நாடியே அவர்கள் போவார்கள். அம்முறையில் நல்ல ஆத்மாக்களுக்கு ஏற்ற உடலங்களாகப் பெற்றோர் அமையாது போய்விடின், பிறப்பு எடுக்கவேண்டிய நல்ல ஆத்மாக்கள் நெடுநாள் காத்திருப்பார்களே யொழிய பொருந்தாத உடலில் வந்து பிறக்கமாட்டார்கள்.

நன்மகன் வேண்டுமென்று நோற்பது தந்தையின் தனிச் செயலன்று; தாயும் அதில் சம்பந்தப்பட்டவளே. பண்டைக் காலத்தில் இது புத்திர காமேஷ்டி யக்ஞம் என்னும் பெயர் பெற்றிருந்தது. வெறுமனே, தீயை வளர்ப்பதால் அல்லது தீயில் சில சடங்குகளைச் செய்வதால் சத் புத்திரர்கள் வாய்த்துவிடமாட்டார்கள். அதற்கேற்ற மனபரிபாகமும், உடல் தூய்மையும், நெறியான வாழ்வும் முதற் காரணங்கள் ஆகின்றன. நன்மகன் வேண்டுமென்று தெய்வத்திடம் பிரார்த்தனை பண்ணுவது இரண்டாவது காரணமாகிறது. காமத்தைத் தூய அன்பாகப் பிரார்த்தனை மாற்றிவிடுகிறது. ஆதலால்தான் அது நோற்றல் என்னும் பெயர் பெறுகிறது. வேள்வித் தீ முதலிய வெளிச் சடங்குகள் தம்மளவில் மக்கட்பேறு பெறுதற்குக் காரணமாகா. ஆனால் அச்சடங்குகளில் மறைமுகமான பயன் ஒன்று உண்டு. நல்லார் பலருடைய ஆசியைப் பெறுதற்கு யாகம் செய்தல் ஒரு சந்தர்ப்பமாகிறது. உலகுக்கும் தனியுயிர்க்கும் எப்பொழுதுமே தொடர்வு உண்டு. அத்தொடர்வை ஞாபகமூட்டுதற்கும் உறுதிப் படுத்துதற்கும் வேள்வி போன்ற சடங்குகள் உதவுகின்றன. புத்திர காமேஷ்டி யக்ஞம் என்பது நாளடைவில் புதியதொரு சடங்காக மாறிவிட்டது. காசி, ராமேசுவரம் முதலிய இடங்களுக்குச் சென்று பிள்ளை வரம் கேட்பது, அதற்கேற்ற ஆகம, வைதிகச் சடங்குகளைச்செய்வது ஆகிய கிரியைகளை இக்காலத்தில் காணலாம். இச்சடங்குகள் தாமாகவே பெரு நன்மையை

உண்டுபண்ணி விடமாட்டா என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். தம்பதிகளின் பரிபாகமும், தூய எண்ணமும், தெய்வ பக்தியும் பிள்ளைவரமாக வடிவெடுக்கின்றன. நன் மகவைப்பெறுதற்கு இவைகளே இன்றியமையாதவைகளாம்.

கருத் தரித்தல்

கோபித்துக்கொள்ளுதலில் இரண்டு பான்மைகள் உண்டு. கோபத்துக்கு வசப்பட்டு தன் வயம் இழந்து, கொடூரமே வடிவெடுத்தவன் ஆதல் ஒன்று; முற்றிலும் தன்மயமாயிருந்துகொண்டு, வேண்டுமென்றே கோபத்தை நாடகமேடையில் போன்று வரவழைத்துக்கொள்ளுதல் மற்றொன்று. முந்தையது அடிமைத்தனம். பிந்தையது ஆண்மைத்தனம். அதே விதத்தில் காமத்தையும் வேண்டுமென்றால் வரவழைத்துக்கொள்ளுதல், வேண்டாமென்றால் விலக்கி விடுதல் — இத்தகைய பான்மையைப் பெற்றவரே ரிஷிகள் அல்லது சான்றோர் ஆகின்றனர். நன்மக்களைப் பெறுதற்கான தகுதி அவர்களுக்கு வருகிறது. அப்படித் தங்களுக்கு உண்டாயிருக்கிற தகுதியை அவர்கள் தாமே உணர்கின்றனர்.

கடவுளைப்பற்றி எண்ணி யெண்ணிக் கடவுளின் மகிமையெல்லாம் பக்தனுடைய மனதுக்கு வந்துவிடுகிறது. பிறகு அதே மகிமைகள் தன் மகவுக்கு வந்து வாய்க்கவேண்டுமென்று அவன் நினைக்கவேண்டும். பண்பட்ட மனதைக்கொண்டு அவன் எத்தகைய மக

வைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்கிருனே அத்தகைய மகவே அவனுக்கு வாய்க்கும். ஏனென்ருல் அவனுடைய சிந்தனை சக்தியே சிருஷ்டி கர்த்தாவாகிறது. இப் பேருண்மையை ஒவ்வொருவரும் உணர்ந்திருக்க வேண் டும். சிறப்பு அனைத்தும் அமையப்பெற்ற நன்மகனைப் பற்றி ஆழ்ந்து எண்ணி அவ் எண்ணத்திலே நிலைபெற்ற தம்பதிகள் தெய்வானுக்கிரகத்தை யுணர்ந்து நள்ளிர வில் கூடுதல் வேண்டும். முதல் ஜாமமும் நான்காம் ஜாமமும் அவர்கள் பொருந்துதற்கு ஏற்ற வேளைகள் அன்று. காலை மாலையாகிய சந்தியா நேரங்களில் அவர்கள் சேர்ந்தால் மகவு அசுர இயல்புடையதாய் விடும். பகலிலே புணர்பவர்க்கு ஆயுள் குறைவது மன்றி சந்ததி விலங்குத் தன்மையுடையதாய்விடும். தம்பதிகளுக்குள், கூடும்பொழுது மன வேறுபாடு இருந்தால் சிசு உயர்ந்த காரியம் எதற்கும் உதவாது போய்விடுவான். கற்பின் விளைவு நன்மகன் என்பதை மீண்டும் ஞாபகத்துக்குக் கொண்டுவர வேண்டும். போகத்துக்காகவென்று பொருந்துதல் கீழோர் இயல்பு; புத்திரப்பேறு பெறுதற்காகவென்று பொருந்துதல் மேலோர் இயல்பு. கட்டுப்பாடுடைய நல்வாழ்வின் மூலம் மேம்பாடு அடைந்துள்ள ஆணும் பெண்ணும் ஒரு தடவை கூடுவது போதுமானது. கருத்தரித்தல் ஒரே சேர்க்கையில் அமைந்துவிடும். அப்படி அமை யப் பெருதார் மேலும் பலமாசங்கள் தவம் இழைத்து, தெய்வ வழிபாடுசெய்து, மீண்டும் பொருந்துதல் வேண்டும்.

குழந்தைகள் பலவற்றை அடுத்து அடுத்து ஏராள மாகப் பெற்றுவிடுவதை இக்காலத்தில் காணலாம். அப்படிச் செய்வதில் பலவிதமான நஷ்டங்கள் உண்டு. விளையக்கூடிய பூமியொன்றில் புழக்கமாகப் பயிர்நட்டு விட்டால் விளைவு குறைந்துபோகும். ஒவ்வொரு பயி ரும் தருகிற முழு விளைவைத் தரமுடியாது. பூமியும் தன்னிடத்து உள்ள சத்தையெல்லாம் இழந்துவிடு கிறது. அதே விதத்தில் ஏராளமான பிள்ளை பெறு கின்றவர்கள் தங்கள் ஆற்றலையும் மேலாம் வீரியத்தை யும் இழந்துவிடுகின்றனர். விரைவில் அவர்களுக்கு விருத்தாப்பியம் வந்துவிடுகிறது. ஞான வாழ்வுக்குத் தகுதியற்றவர் ஆய்விடுகின்றனர். பிறந்த பிள்ளை களுக்குப் பெற்றோரிடமிருந்து வரும் போஷணையும் குறைந்துவிடுகிறது; ஏழைகளாயின் உணவினின்று கிடைக்கிற போஷணையும் குறைந்துவிடுகிறது. பெற் றோர் கவனிப்பு எல்லார்க்குமே குறைந்துவிடுகிறது. ஆக, ஜனத்தொகை பெருகுமளவு சமுதாயத்தின் தரம் கீழே போய்விடுகிறது. ஒரு பிள்ளையைப் பெற்றெடுத் தான பிறகு மற்றொரு பிள்ளையின் பொருட்டுப் பெற் றோர் ஐந்து வருஷ காலம் கூடாதிருக்க வேண்டும். முற்றும் புலனடக்கம் பழகியவர்க்கே அப்படிச் சேரா திருப்பது சாத்தியமாகும். அப்படிச் செய்கின்றவர் கள் சமுதாயத்துக்கும் தங்களுக்கும் பேருதவி செய்து கொள்கின்றனர்.

இரண்டு கேடுகள்

நவீன மருத்துவ முறையில் கர்ப்பத்தடை என்பது ஒன்று வந்திருக்கிறது. அதன் நோக்கம் ஆணும் பெண்ணும் வேண்டியவாறு கூடிக் கொள்ளலாம்; ஆனால் பிள்ளை பெறாது இருக்கவேண்டும் என்பதாம். போகத்தில் பொருந்தியிருக்கும் இன்பம் வேண்டும், ஆனால் பிள்ளை பெற்று வளர்த்தல் என்னும் துன்பம் வேண்டாம் என்பது அதன் நோக்கமாகும். வாழ்க்கையின் குறிக்கோளுக்கு இது முற்றிலும் மாறுபட்டதாகும். போகத்தில் ஈடுபடும்பொழுதெல்லாம் சிறிது சிறிதாக ஆத்மஹத்தி அல்லது தற்கொலை நிகழ்கிறது. இன்பத்தை அனுபவிப்பதாக எண்ணிக்கொண்டு மனிதன் மரணத்தினருகில் விரைந்து ஓடுகிறான். பின்பு கிட்டத்தட்ட சிசு வதைக்கு ஒப்பான பாபச்செயல் ஆகிறது கர்ப்பத்தடை. பிறக்கப்போம் ஒவ்வொரு குழந்தையையும் கருவிலேயே வேர் அறுக்கும் செயலாம் இது. மனிதனிடத்து உரு எடுக்கும் மேலாம் இயல்பை இது அழித்து விடுகிறது. சுயநலமே வடிவெடுத்தவனாக அவன் மாறிவிடுகிறான். தன் நலத்தின் பொருட்டு எத்தகைய தகாத செயலையும் செய்ய அவன் துணிபவன் ஆகிறான். கொடூரமான மிருகத் தன்மையில் வீழ்ந்துவிடுவது கர்ப்பத்தடையின் விளைவு ஆகும்.

காமப்புதல்வர்கள் பெருகுவதால் சமூகத்தில் ஒரு விதமான கேடு உண்டாகிறது; மிகைபட்ட ஜனத்தொகை உண்டாகிறது; உயர்ந்த மனப்பான்மையும் நல்லறிவும் இல்லாது போய் விடுகிறது; போட்டியும்

பொறுமையும் வளர்கின்றன. கயவர் கூட்டத்திலிருந்து வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது. மற்று, கர்ப்பத்தடை செய்து காம நோயைப் பெருக்கிக் கொண்டு போகின்றவர் விலங்குத் தன்மையில் மூழ்கி விடுகின்றனர். தன் வயம் இழந்து ஜனத் தொகையைப் பெருக்குபவர்க்குச் சிறிதாவது இரக்கம் இருக்கிறது. கர்ப்பத்தடை செய்பவர்க்கோ அது சிறிதும் இல்லாது போய் விடுகிறது. தெய்வ பக்தியுடன் கூடிய தூய பிரம்மச்சரிய வாழ்வு ஒன்றே இக்கேடுகளை அகற்றுதற்கு உற்ற உபாயமாகும். அளவுக்கு உட்பட்ட ஜனத்தொகையும் சீரிய மனப்பான்மையும் புலனடக்கத்தினின்று வருவனவாம்.

நவீன மருத்துவமுறை மற்றோர் உபாயத்தைப் பிள்ளை பெறுபவர்க்கிடையில் வழங்கி வருகிறது. வேதனைகளில் பெரிய வேதனை பிரசவ வேதனை. அதை முன்னிட்டே பிரசவ வைராக்கியம் என்பது ஒன்று உண்டாகிறது. வேதனைப்படுபவர் எல்லார்க்கும் அத்தகைய மனக்கலக்கம் உண்டாவது இயல்பு. அப்படி வரும் பிரசவ வேதனையை ஔஷதத்தின் துணை கொண்டு அறவே அகற்றிவிடலாம். நவீன மருத்துவம் கொடுத்துள்ள பிள்ளை வரம் என்று பலர் இதைப் போற்றுகின்றனர். பிள்ளை பெறுந்தறுவாயில் உள்ள கற்பிணியின் உடலில், அல்லது ஊசியைக்கொண்டு ரத்தத்தில் மருந்து செலுத்தப்படுகிறது. அப்பொழுது அவளுக்கு ஒருவித மயக்கம் வந்துவிடுகிறது. பிள்ளை பிரசவம் ஆவது அவளுக்கு விளங்குவதில்லை. குழந்தை

யைப் பெற்றெடுத்தான பிறகு மயக்கம் தெளிகிறது. வேதனையினின்று விடுதலையடைந்தது பிள்ளைத்தாய்ச் சிக்குக் கிடைத்த வாய்ப்பு ஆகும். கஷ்டப்படாது குழந் தையைப் பெற்றுவிட்டது எல்லார்க்கும் மகிழ்ச்சியூட்டு கிறது. ஆனால் அதினின்று உண்டாகும் மற்றொரு பெருநஷ்டம் யாருக்கும் விளங்குவதில்லை. பிள்ளை பெறும்பொழுது உண்டாகிறவேதனையில் பயன் ஒன்று உண்டு. பெறுகிறபொழுது உண்டாகும்பெரும்வேதனை பிறகு பிள்ளையைப் பார்க்கின்ற வேளையில் பெரும் பற்றுதலாக வடிவெடுக்கிறது. பிரசவ வேதனையில்லாத தாய்க்குப் பிறகு பிள்ளைப் பற்று பலமடைவதில்லை. சிறிது நேரத்துக்கு உண்டாகும் துயரத்துக்கு அஞ்சி ஆயுளெல்லாம் இருக்கவேண்டியபுத்திர வாஞ்சையைப் பறிகொடுப்பது பொருந்தாது. ஆபத்துக்கு ஏதுவான ஏதோ சில வேளைகளில் இத்தகைய மருந்தின் உதவியை நாடலாம். பொதுவாக இயற்கையின் போக்கில் பிள்ளை பெறுதலே சிறந்த முறையாகும்.

பிரசவ வேதனை யாருக்கு அதிகம் உண்டாகிறது என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். உடல் உழைப்பு இல்லாது வெறுமனே உட்கார்ந்திருக்கும் மாது ஒருத்தி மிகவும் பிரசவ வேதனைப்படுவாள். கால மெல்லாம் வீட்டுக்குள்ளேயே அடைபட்டிருப்பதும் ஒவ்வாது. வெயிலிலும், காற்றோட்டமுள்ள வெட்ட வெளியிலும் நடமாடித்திரிவது பிள்ளை பெறும் பெண் ஒருத்திக்கு முற்றிலும் அவசியம். இயற்கையினின்று பெறவேண்டிய நலன்களையெல்லாம் பெறுதவர்க்கே

பிரசவ வேதனை அதிகமாக உண்டாகிறது. பிறகு செயற்கை முறையில் அவ்வேதனையைத் தடுக்க முயலு கின்றனர். இயற்கைத் தாய் அளிக்கும் நல்வழியை அனுசரித்துப்போவதேபிள்ளைத்தாய்ச்சிக்குப் பொருத் தமான முறையாகும்.

ஸ்மிருதிகளின் பிரமாணம்

முற்காலத்தில் வாழ்ந்த பெரியோர்களும் முனிவர் களும் ஸ்மிருதி, தர்ம சாஸ்திரம் முதலிய நூல்களில் நல்ல மைந்தரைப் பெறுவதில், சாஸ்திர பூர்வமாயும் பகுத்தறிவுக்கேற்றவையாகவும்உள்ள ஆராய்ச்சிகளைச் செய்திருக்கின்றனர். அம்முறைகளைப் பின்பற்றினல் எவரும் விரும்பிய விதம் சந்ததியைப் பெறமுடியும். அவர்கள் ஒருவகையில் இயற்கையை ஆராய்ந்து எவரா லும் வெல்ல முடியாத விதியை வென்று விட்டனர் என்று கூடச் சொல்லி விடலாம்.

மாதந்தோறும் பெண்டிர் வீட்டிற்கு விலக்காக இருக்கின்றனரல்லவா? அந்த நாள் முதல் பதினறும் நாள் முடியக் கருவைத் தரிக்கும் காலமாகும். பதி னேழாம் நாள் முதல் மறுபடியும் விலகியிருக்கும் நாள் வரையில் அவர்களுக்குக் கரு ஏற்படாது. அந்தப் பதினறு நாட்களில் முதல் மூன்று நாட்கள் விலகியிருக் கும் நாட்கள் ஆகும். நான்காவது நாளில் மங்கை குளித்துத் தூய்மை பெறுகிருளாகிலும்முழுத்தூய்மை அன்று வந்துவிடாது. ஆதலால் அந்த நான்காம் நாளையும் விலக்கியாகவேண்டும். ஆக 1, 2, 3, 4 நாட்

கள், மைந்தனைப் பெறவேண்டி மங்கையை அணுகுவதற்கு, (போகத்திற்கு அல்லது புணர்ச்சிக்குத்) தகாத நாட்களாகும். 5 வது முதல் 16 முடிய உள்ள மிகுந்த நாட்களில், பதினொன்றுவது நாளும் பதிமூன்றுவது நாளும் விலக்கப்பட வேண்டியவையாகும். அதில் ஒற்றைப்படை (5–7–9 முதலிய) நாட்களில் புணர்ந்தால் புதல்விதான் ஜனிப்பாள். இரட்டைப்படை (6–8–10 முதலிய) நாட்களில் புணர்ந்தால்தான் ஆண் குழந்தையைப் பெறமுடியும். அதிலும், விலக்கு நாளிலிருந்து நாள் அதிகம் செல்லச் செல்ல உயர்ந்த சந்ததி கிடைக்கும்.

முதல் மூன்று நாட்களில் மிருகத்தன்மையுடையவன் கூட நெருங்கமாட்டான். அந்த நாட்கள் விலக்கப்பட்டவைகளாகும்.

நான்காவது நாளில் (இது விலக்கப்பட்டது) புணர்ச்சி ஏற்பட்டுத் தோன்றுபவன், குறைந்த ஆயுளும், குறுகிய உள்ளமும் பெற்று வருந்தும் மைந்தனாக இருப்பான்.

ஐந்தாவது நாளின் புணர்ச்சியால் (இது ஒற்றைப் படை) தோன்றுபவள் அதிக மக்களைப் பெற்று வாழக் கூடிய புதல்வியாக இருப்பாள்.

ஆறும் நாளின் (இது இரட்டைப்படை) புணர்ச்சியினால் ஏற்படப்போகும் புதல்வன் பண்பிலே நடுத்தரமாக இருப்பான்.

ஏழாவது நாளின் சேர்க்கையினுல் தோன்றும் சந்ததி மலடியாக வாழப்போகிற புதல்வியாக இருப் பாள்.

எட்டாவது நாளில், ஏற்படக்கூடியவன் தலைமை வகிக்கும் ஆற்றல் பெற்ற மைந்தனுக இருப்பான்.

ஒன்பதாவது நாளில் ஏற்படக்கூடிய மகள், கண வனுடைய உள்ளத்தை ஒட்டி நடக்கும் சிறந்த மனைவி யாகத் திகழ்வாள்.

பத்தாவது நாளில் ஏற்படக்கூடிய மகன் சிறந்து விளங்குவான்.

பதினென்ருவது நாளில் (இது தடுக்கப்பட்ட ஒற்றைப்படை நாள் என்பதைக் கவனிக்கவும்) ஏற் படக்கூடிய மகள், அறப்பாதையை விட்டு அகன்று நடப்பவளாக இருப்பாள்.

பன்னிரண்டாவது நாளில் ஏற்படுபவன் மிகச் சிறந்த மைந்தனுக இருப்பான்.

பதிமூன்ரும் நாளில் (இதுவும் தடுக்கப்பட்ட ஒற்றைப்படை நாளாகும்) தோன்றுபவள் கற்புப் பாதையினின்று விலகுபவளாக இருப்பாள்.

பதினுன்காம் நாளில் ஏற்படக்கூடிய மைந்தன் அறவாழ்க்கையையும், கடவுளறிவையும் பெற்று நன்றிமறவாமை, உறுதியான மனப்பான்மை முதலிய நற்குணங்களைப் பெற்றுச் சிறந்த தலைவனுகத் திகழ் வான்.

பதினைந்தாவது நாளில் (இது புதல்வியைப்பெறக் கடைசிநாள்) ஏற்படுபவள், சிறந்த கற்பரசியாகவும், நல்ல மைந்தர்களைப் பெறுபவளாகவும், சிறந்த ஆட்சி புரிபவனுடைய இல்லாளாகவும் திகழ்வாள்.

பதினாறும் நாளில் தோன்றும் ஆண்மகன், சிறந்த கல்விபெற்று, நல்ல லக்ஷணங்கள் நிறைந்து விளங்கு பவனாகவும், உண்மையினின்று பிறழாதவனாகவும், புலன்களை வென்றவனாகவும், பலருக்கும் அடைக்கலம் அளிக்கக்கூடியவனாகவும் இருப்பான்

மேலும் புணர்ச்சி ஏற்படும் நக்ஷத்திரத்திலிருந்து 12வது முறை ஏற்படப்போகும் அதே நக்ஷத்திரத்தில் சந்ததி ஏற்படும். ($27 \times 11 = 297$வது நாள்) ஆதலால் கருத்தரிப்பதற்கு நல்ல நக்ஷத்திரமாக ஆராய்ந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளுவது நலம்.

இரு பக்ஷங்களின் அஷ்டமிகளையும், சதுர்தசிகளை யும், (வளர் பிறையின் 8, 14 வது நாட்களும், தேய் பிறையின் அதே நாட்களும்) பூர்ணிமையையும், அமா வாஸ்யையும், மாத சங்கிராந்தியாகிய முதல் தேதியை யும் தகாத காலமாகக் கருதவேண்டும்.

நக்ஷத்திரங்களில் பரணி, கார்த்திகை, திருவா திரை, ஆயில்யம், மகம், பூரம், விசாகம், கேட்டை, பூராடம், உத்திராடம், பூரட்டாதி, உத்திரட்டாதி ஆகிய 12 நக்ஷத்திரங்களும் விலக்கப்பட்டவை. மீதி நக்ஷத்திரங்களில் அசுவினி, மிருகசீர்ஷம், புனர்பூசம்,

பூசம், சித்திரை, அவிட்டம் ஆகிய 6 நக்ஷத்திரங்கள் நடுத்தரமானவை. ரோஹிணி, உத்தரம், ஹஸ்தம், ஸ்வாதி, அனுஷம், மூலம், திருவோணம், சதயம், ரேவதி ஆகிய ஒன்பது நக்ஷத்திரங்கள் சிறந்தவை. வாரம், லக்னம் இவற்றில்கூட உயர்வு தாழ்வு உண்டு.

இவ்வளவையும் ஆராய்ந்து, இரவு நேரத்தில் இருயாமங்கள் மட்டும் சேர்ந்திருக்கலாம். யாமம் என்பது மூன்று மணி நேரம். அந்த நேரத்தில் மங்கை தூய்மையான உடலையும் உள்ளத்தையும் பெற்றிருத்தல் அவசியம். கவலை, நோய், சினம் இவற்றைப் பெற்றிருக்கக்கூடாது. கணவனிடம் அன்புகொண்டவளாக இருத்தல் வேண்டும். மிகவும் பசியினால் களைத்திருத்தலோ, அதிகமான உணவை உட்கொண்டு மதங் கொண்டிருத்தலோ கூடாது. நரை மயிர்களைப் பெற்றிருத்தல் கூடாது (வாலிபப்பருவம் வேண்டும்). கணவனும் இதற்கேற்ற குணங்களைப் பெற்றிருக்க வேண்டும். இந்த நிலையில் இருவருடைய சேர்க்கையினால் ஏற்படக்கூடிய மைந்தன் சிறந்து விளங்குவதில் யாது விந்தை ?

கணவன் மனைவியைவிட அதிகமான வலிமை பெற்றிருக்கையில் கரு ஏற்பட்டால், ஆண் குழந்தை பிறக்கும். மனைவி கணவனைவிட அதிக வலிமை பெற்றிருந்தால் புதல்வி ஜனிப்பாள். கணவன் மனைவி இருவரும் சமமான வலிமை பெற்றிருந்தால் அலி (ஆணும் பெண்ணும் இல்லாதது) ஏற்படும். இதற்காக மைந்தனை விரும்புகிறவன் மனைவியைப் பசி, வேலை முதலிய

வற்றுல் சிறிது வலிமை குன்றியவளாக்கிய பின்பு கருத் தரிக்கச் செய்யவேண்டும்.

கருத்தரித்த பின்பு எப்பொழுதுமே புணர்தல் கூடாது. ஒரு மைந்தன் பிறந்த பின்பு மறுபடியும் மைந் தனுக்காகப் புணருதல் அவசியமில்லை. இரண்டாவது மைந்தன் கடமைக்காக உண்டுபண்ணப்பட்டவன் அல்ல என்றும், தந்தையின் செல்வம் முழுதும் முதல் வனுக்கே செல்லும் என்பதும் பழைய கொள்கை. ஆக விலக்கு நாளிலிருந்து 6, 8, 10, 12, 14, 16 நாட்களில் மைந்தன் பிறப்பான் என்றும், 5, 7, 9, 15 நாட்களில் மகள் பிறப்பாள் என்றும் தெரிகிறது. இவற்றில் நக்ஷத்திரம், திதி முதலியவற்றைக் கவனித்துப் பார்த் தால் கணவனும் மனைவியும் கூடுதற்கு வெகு சில நாட்கள்தான் கிடைக்கும் என்பதைக் கவனிக்கவும். ஆக, இம்முறைகளைப் பின்பற்றி வந்தால் விரும்பிய விதம் நல்ல மைந்தனைப் பெறுவதில் ஐயம் இல்லை.

பிரஜைகளின் அதிகரிப்பைத் தடுப்பதற்கு இதை விடச் சிறந்த முறை வேறு ஒன்று இருக்கிறதாகத் தெரியவில்லை. இம்முறைப்படி இல்வாழ்க்கை நடத்து பவனை (நைஷ்டிகன் அல்லாவிட்டாலும்) பிரம்மசாரி என்றே சொல்லலாம்.

பராசர முனிவர் வியாசரைப்பெறுவதற்கு விரைந் ததையும், திருதராஷ்டிரன், பாண்டு, விதுரர் மூவரு டைய குணங்களில் உள்ள வேறுபாட்டிற்குக் காரணங் களையும் இதையொட்டி ஆராய்ந்தால் எளிதில் உணரலாம்.

கர்பிணியின் கடமைகள்

கருத்தரித்தான பிறகு கர்ப்பிணியின் கடமைமிகப் பெரியதாகிறது. கணவனும் மனைவியும் நன்மகவைப் பெறுதற்காக நெடுநாள் செய்த ஆயத்தங்களின் உச்ச நிலை இப்பத்து மாசங்களில் வந்தமைகிறது. மகவு நல்ல உருவம் எடுப்பது, உணவு பெறுவது, அறிவு அடைவது ஆகிய இத்தனையும் கர்ப்பத்தில் பத்து மாசம் ஓயாது நிகழ்கின்றன. மேலோருடைய ஜீவிய சரிதங்களை வாசிக்கவும் கேட்கவும் இதுவே தருணமாகும். அச் செயலில் தம்பதிகள் இருவரும் ஆழ்ந்து ஈடுபடுதல் அவசியம். தேவாராதனைக்கும் தூய எண்ணங்கள் எண்ணுதற்கும் ஏற்ற காலம் இதுவே. பராக்கிரமமும், பேரறிவும், பேராற்றலும் வாய்க்கப்பெற்றுள்ள புருஷனையே அவர்கள் சர்வகாலமும் சிந்தையில் வைக்க வேண்டும். வீரமும் சாந்தமும் மனதைவிட்டு விலகலாகாது. திருப்தியும் இனிமையும் உள்ளத்தில் நிறைந்து இருத்தல் வேண்டும்.

கர்ப்பிணியின் மனநிலையே கருவுக்கும் வந்தமைகிறது என்பதற்குச் சான்றுகள் பல உள. சென்ற உலகயுத்தத்தின்போது அமெரிக்காவின் கப்பல் ஒன்று தாக்கப்பட்டது. அது மூழ்குதற்கு முன்பு உள்ளே இருந்த பிரயாணிகள் மிதக்கும் வளையங்களை இடுப்பில் மாட்டிக்கொண்டு கடலில் குதித்துவிட்டார்கள். அக் கூட்டத்தில் கர்ப்பிணியொருத்தி இருந்தாள். அவள் கடலில் மிகவும் மருண்டுபோய்விட்டாள். விதிவசத்தால் ஒரு மாசத்துக்குள் அவள் மற்றுமொரு கப்பலில்

அதேவிபத்துக்கு ஆளானுள். பிறகு அவள் ஈன்றெடுத்த குழந்தை இப்பொழுது அமெரிக்காவில் இருக்கிறது. எங்கேயாவது நீர்ப்பரப்பைக் கண்டால் அக்குழந்தை கலங்கி மூர்ச்சை போய்விடுகிறது. கர்ப்பத்தில் இருந்த பொழுது தாயின் அனுபவம் குழந்தைக்கும் வந்து விட்டது. பிள்ளை பெறுதலில் தாயின் பொறுப்பு மிகப் பெரியது என்பதை சீதாபிராட்டி உணர்ந்திருந் தாள். கர்ப்பிணியாயிருந்தபோது அவள் காட்டுக்கு அனுப்பப்பட்டாள். கர்ப்பத்தில் இருந்த சிசுவின் பொருட்டு அவள் தன் துயரத்தை உடனே அகற்றி விட்டாள். வீரம் நிறைந்த தபஸ்வினியாக அவள் ரிஷி ஆச்ரமத்தில் வசித்து வந்தாள். அதன் விளைவே லவகுசன் என்ற இரு வீரச் செல்வர்கள் ஆகும்.

இயற்கை யழகைக் கண்டு களித்தல், வெளியில் சென்று உலாவுதல், உடல் உழைப்பில் சிறிது ஈடுபடு தல் ஆகியவைகள் கர்ப்பிணிக்கு இன்றியமையாதவை களாம். முறையான உழைப்பு உடைய மாது ஒருத் திக்கு மகவு ஈன்றெடுப்பதில் சிரமம் ஏற்படுவதில்லை. எளிதில் ஜீரணம் பண்ணக்கூடிய சத்துள்ள உண வையே கர்ப்பிணி உண்ணுதல் வேண்டும். போதிய வளவு ஆகாரம் அவளுக்குக் கிடையாதுபோய்விட்டால் சிசு உறுதியற்றதாய்விடும். பயனற்ற ஆசைகளுக்குக் கர்ப்பிணி வசப்படலாகாது. அவளிடத்து ஆசை அதி கரிக்குமளவு மகவுக்கு தரித்திர மனப்பான்மை வந்து விடும். தனக்கு விருப்பமான நல்லுணவை கர்ப்பிணி மகிழ்வுடன் புசிக்கவேண்டும். அதை மற்றவர்களுக்கும்

அன்புடன் வழங்கவேண்டும். அதனுல் மகவு நிறை மனமுடையதாகும். அச்சம், கோபம், பொருமை முதலிய கீழ்மைகளுக்கு மனதில் சிறிதும் இடம்கொடுக்கலாகாது. அச்சம் தாயின் உள்ளத்தில் இருக்குமாயின் கருவில் இருக்கும் சிசு கோழையாய்விடும். கோபிக்கின்ற வேளையிலெல்லாம் உடல் முழுதும் நஞ்சு ஆய் விடுகிறது. மனதில் விவேகமும் நல்லறிவும் மறைந்து போய்விடுகின்றன. சிசு மூர்க்கத்தனமுடையவனுக மாறுவது அதன் விளைவு ஆகும். பொருமை தாயினிடத்தில் இருந்தால் குழந்தையின் சுபாவம் பிறர்க்குக் கேடு செய்வதாய் அமையும். தாயின் உள்ளம்போன்று மகவின் உள்ளமும் கருவெடுப்பதனுல் இத்தகைய கீழ்மைகளை அறவே அகற்றவேண்டும். மேன்மையே சர்வ காலமும் மனத்தகத்து மிளிர்ந்து கொண்டிருப்பது முற்றிலும் அவசியம்.

படம் வரையும் ஓவியக்காரன் எத்தகைய படத்தை மனதில் கற்பனை பண்ணுகின்ருனே அத்தகையதே பிறகு படமாக வந்தமைகிறது. உயிரற்ற படம் ஒன்றை முதலில் உள்ளத்தில் ஒழுங்காக கிரகித்தால்தான் அதற்கு உயிர்க்களை வந்தமைகிறது. இனி, உயிரையே உற்பத்திபண்ணப்போம் கர்ப்பிணி ஒருத்தி தான் உயிர் ஓவியத்தை உருவாக்குவதாக உணரக் கடமைப்பட்டிருக்கிருள். தன் வயிற்றில் வாய்த்திருப்பது தெய்வ அம்சம் அமையப்பெற்றது அதை அன்புடன் பேணுவது தேவ ஆராதனைக்கு ஒப்பானது. தன் உடலை தேவாலயமாக அவள் உணர்தல் வேண்டும்.

உண்ணும் உணவு இறைவனுக்குப் படைக்கப்படும் அமிர்தமாகும். எண்ணும் எண்ணமோ இறை வணக்கம் ஆகிறது. ஆகவே அது இனியதாகவும் திண்ணியதாகவும் இருப்பது அவசியம். உலாவுதல் ஆலயத்தை வலம் வருவதற்கு ஒப்பானது ஆகிறது. இத்தகைய உணர்வு நிறைந்த வாழ்வைக் கர்ப்பிணி வாழ்ந்து வருவாளாக. அப்படிச் செய்தால் அவளுக்கு மகவாகப் பிறப்பது மேன்மையுற்று மிளிர்வது திண்ணம்.

சில நூறுண்டுகளுக்கு முன்பு ராஜபுதனத்தில் சிற்றரசி ஒருத்தி வாழ்ந்து வந்தாள். அவள் நாட்டுக்கு அரசியாக இருந்தது போன்று கற்புக்கும் அரசியாக மிளிர்ந்தாள். மனத்துக்கண் மாசு என்பது சிறிதும் படியாத மேலோர்களுடன் அவள் வாழ்க்கைத் தத்துவங்களைப்பற்றி ஆழ்ந்து ஆராய்ச்சி பண்ணுவது உண்டு. அத்தத்துவங்களை யெல்லாம் அவள் அனுஷ்டானத்திலும் கொண்டு வந்தாள்.

அவ்வரசிக்கு இரண்டு சத்புத்திரர்கள் வாய்த்தார்கள். நல்ல உடலமைப்பும் மன உறுதியும் வாய்க்கப் பெற்றவர்கள் அவர்கள். சின்னஞ்சிறு வயதிலிருந்தே அவர்களுக்கு உலகப்பற்று போய்விட்டது. ராஜ்ய பரிபாலனத்துக்கு அவர்கள் உதவுவார்கள் என்னும் அறிகுறிகள் தென்படவில்லை. துறவி வேந்தர்களாக நிவிருத்தியில் போவதற்கான அறிகுறிகளே அவர்கள் பால் தென்பட்டன. இதையெல்லாம் கவனித்து வந்த அரசனும் மற்றும் பல பிரமுகர்களும் அரசியிடம் "உலகப்பற்றில்லாத நீ உன் குழந்தைகளையும் அவ்வழி

செல்லும்படி சமைத்துவிட்டாய். ஆட்சி புரியவல்ல நன்மகன் ஒருவனையும் நீ ஏன் பெற்றெடுத்துத் தரலாகாது?" என்று அவர்கள் அரசியிடம் தெரிவித்தார்கள். அவளும் அதற்கு இசைந்தாள். பிறகு அவளுக்கு கருத்தரித்தது முதல் ஆட்சி புரிவதைப் பற்றிய சீரிய எண்ணங்களையே எண்ணி வந்தாள். தனது மூன்றும் மகவுநெறிபிறழா நேர்மையுடைய நாட்டரசன் ஆவான் என்று அவள் ஆழ்ந்து எண்ணி வந்தாள். எண்ணியாங்கு ராஜநீதி வாய்ந்த புத்திரன் ஒருவனைப் பெற்றெடுத்தும் கொடுத்தாள். இச்சம்பவத்தைத் தாய்மார் கருத்தில் வைப்பது பொருந்தும்.

நெறியான இல்வாழ்வு விலங்கு இனத்தில் சிங்கத்துக்கு உண்டு. ஆண் சிங்கமும் பெண் சிங்கமும் பன்னிரண்டு வருஷத்துக்கு ஒரு தடவை தான் கூடுகின்றன என்னும் ஐதிகம் உண்டு. அதன் விளைவாக அவைகளுக்குப் பிறப்பவை எப்பொழுதுமே செம்மை நிறைந்த சிங்கக்குட்டிகளாம். மக்களுள் நல்லார் யார் உளரோ அவர்களே இல்லறத்தை நல்லறமாக்க முடியும். அன்னவர்க்கே நன்மக்களும் மகவுகளாகத் தோன்றுவர். நன்மக்களை ஈன்றெடுப்பதே சிறந்த தேவாராதனையும் ஆகும். பெருமக்கள் இச்சீரிய செயலில் ஈடுபடுவார்களாக.

தபோவனத் தொடர் 10

प्रज्ञानं ब्रह्म

தபோவனப் பிரசுராலயம்

திருப்பராய்த்துறை போஸ்ட்

திருச்சி ஜில்லா

விலை 50 பைசா